ஜநவிநோதினி.

இல. 5, 6.] {மேமீ ஜூன்மீ} 1884 [புஸ்த. XV.

கடலின் சிறந்தகாட்சிகள்.



நன்னம்பிக்கைமுனை.

கப்பலேறிக் கடல்யாத்திரைசெய்த ஒருவர் கடலில் தாம் கண்ட சிறந்தகாட்சிகளைப் பெருமையாய்ப் பேசியிருக்கிறார். அவர் சொல்லியவிதமாகவே அவற்றை ஒருவாறு அடியில் எழுதுகிறோம்.

கடலென்ற பேரைக் கேட்கும்போதே நடுக்கங்கொண்டவர்களாகிப் பலர் மரக்கலங்களின் மீதேறிக் கடல்யாத்திரைசெய்ய அஞ்சுகின்றனர்; சிலர் மரக்கலங்களை மிதக்கும் சிறைச்சாலையென்றும், வேறுசிலர் நீர்மேல்மிதக்கும் நரகமென்றுங் கருதியிருப்பதாகக் காண்கிறது. ஆயினும், நான் அறிந்தமட்டில் இவ்விருதிறத்தார் கொண்ட கருத்தும் சரியன்று: சமுத்திரயாத்திரை செய்வதினால் தேசாந்தரப் போக்குவரவு வித்தியாபிவிருத்தியாகிய இரண்டு பெருநன்மையுண்டாகும். இந்தமட்டோடன்றி, முத்திநெறிபெறுவதற்கேற்ற தத்துவஞானமும் கடலின்காட்சியைக் காண்பதினாலே உண்

டாகுமன்றோ? பார்க்கப் பதினாயிரங்கண்ணும் போதாத காட்சியும், அறிவு விருத்தியாவதற்கேற்ற விஷயமும அதில் அமைந்திருக்கின்றன. ஆண்டவனுடைய படைப்பில் சிறந்தனவாகிய கடலையும், வானையும் நாடோறுமநாம பார்த்தவண்ணமாயிருக்கிறோம். இவவிரண்டினுள் ஒன்றிலாவது சிறிதும் வேறுபாடிலலையெனினும், எததனைநாள் தான் பார்த்துக்கொண்டிருந்தாலும் இன்னும் பாரக்கவேண்டுமென்று ஆசை அதிகமாகிறதேயல்லாது, பார்ததமட்டில் போதுமென்ற திருப்தியுண்டாவதில்லை. நன்னம்பிக்கைமுனையெனப் பிரசித்திபெற்றதான ஆப்பிரிக்காவின் தென்முனைக்கு அபபால, கடலிலிருந்து பார்ப்பவாகளுக்குக் காலைப்பொழுதும் மாலைப்பொழுதும் கண்ணுக்கினிய காட்சியாயிருக்கும. அங்கே காலையிலும மாலையிலும் ஆகாயம் சில்லென்று குளிர்ந்திருப்பினும், அக்குளிர்ச்சியானது தேகத்துக்கு ஆரோக்கியமாய்ப் பொறுக்கும்படிச் சுகமாயிருக்குமேயல்லாது, அதிக சைத்தியமாய் ஊதலெடுத்துப் பல்லைக்கிட்டி நடுக்கும்படி வெறுப்பாயிராது. பின்மாலைவேளையில் அருணோதயமாவதற்குமுன்பே நாங்கள் அங்கே சூரியன் உதிப்பதைப் பாரக்குமாறு கப்பலின் மேற்றளத்திற்குச செல்வதுண்டு; அக்காடசியின் மகிமையை விளங்கச்சொல்வது அரிது. விடியற்காலத்தில் திவ்யமான வெளிச்சமொனறு தோன்றுகிறது. அவ்வெளிச்சமானது பூமியின் உத்தரகண்டத்து வானத்தில் தோன்றுவதுபோலப் புடலம்பூப்போன்ற வெண்மையான நிறமுடையதன்று, அருணோதயத்துக்குமுன், சற்றே மங்கலான இந்திரவில்லின் நிறம்போன்ற அழகிய கிரணங்கள் பளிச்சென்று புறபபட்டுக கிழக்கு வெளுக்கின்றது. சிறிதுநேரத்திற்குள்ளெல்லாம் ஆதித்தன் அடிவானில் தோன்ற, விண்ணெல்லாம் சுடரொளிவிட்டெரியும்; அப்பொழுது சூரியமண்டலத்தைப் பார்த்தால் பத்தரைமாற்றுத் தங்கம்போலத் தேஜோமயமாயிருக்கும். சூரியோதயமானபின்பு கிழக்கேயிருந்து சூரியன் விண்மீதெழுவதைப் பாரத்தால், பெரிதான அக்கினிகோளமொன்று கடலினின்று எழுந்து ஆகாயகமனஞ்செய்வதுபோலிருக்கும். சூரியாஸ்தமனவேளையும் அவ்வாறே சிறப்புற்றிருக்கும். ஒவ்வொருவேளைகளில் மெல்லிய மேகங்கள் மேற்குதிக்கில் திரள்திரளாய்க் குவிந்து விந்தையாகப் பற்பல உருவங்கொண்டிருப்பதைப் பார்ததால், பனிக்கட்டிகள் வெள்ளைவெளேரென்று நிர்ம்மலமாய்க் குவிந்திருப்பதுபோலிருக்கும். அவை அனைத்தும் இருந்தாற்போலிருந்து மாயமாய்ச் சுடரொளிபெற்றுச் சிங்காரமாக வானில் விளங்காநிற்கும். இப்பொன்னிறமானது அவ்விளமேகத்தின்மீது பட்டமாத்திரத்தில், அம்மேகப்படலம் சுடர்விட்டெரியும்; அத்தன்மையான ஆகாயக்காட்சியின் அழகை இன்னவாறெனறுகூற முயல்வதரிது. அப்பொழுது மாலுமி தன் கப்பலின் பாயைச் சற்று விலக்கிக்கொண்டு அதைப் பார்த்தால்,

அவன் அற்புத ஞானோபதேசம்பெற்றுத் தன்னருகே நின்றவர்களை நோக்கி "இக்காட்சியைக் கண்டீர்களா; சமுத்திரயாத்திரைசெய்து இவ்வற்புதத்தைக் கண்டவன் எவனாயினும் நாஸ்திகனாயிருப்பானோ" என்பான்.

இவ்வுலகில் நாஸ்திகவாதிகள் அதிகமாயிருப்பார்களென்று எனக்குத் தோற்றவில்லை. மானிடஜநநமெடுத்தவர் மனதிலெல்லாம், கடவுளொருவர் உண்டென்னும் எண்ணம் திட்டமாய்க் குடிகொண்டிருக்கும்படி அவர்தாமே செய்திருக்கிறார். நாம் ஒருவேளை அப்படி இல்லாதிருந்தாலும், சிருஷ்டிவர்க்கத்தில் எதைப்பார்த்தாலும் அது, "என்னைப் படைத்துக்காப்பவன் ஆண்டவன்" என்று சொல்வதுபோலக் காண்கின்றது. உண்மை இவ்வாறிருக்கின்றதென்றாலும், நல்லோனாகிய கப்பல் தலைவன் ஒருவன் சொல்லுகிறபடியே, கடலிலுள்ள அற்புதங்கள் சீர்தூக்கிப் பார்க்கத்தக்கவையென்றும், மற்றவைகளைவிட மேலாக மனதில் பதியத்தக்கவையென்றும் நாமும் ஒப்புக்கொள்ளவேவேண்டும். அவ்வற்புதங்களெல்லாம் மிகவும் இன்புறத்தக்கனவாம். தரையிலுள்ள பொருள்களோடு நாம் குழந்தைப்பருவமுதற்கொண்டே பழகியிருக்கிறோமே; அந்தப் பொருள்களையே நாம் கடலில் காணுங்கால், அவையாவும் புதுப்புதிதுபோலிருக்கும்; அல்லது முன்கண்டதற்கு முற்றும் வேறாக மாறியிருக்கும். அவற்றை நாம் காண்கையில், முன்னிலும் நமது கருத்தை அதிகமாய்க் கவரத்தக்கவையாயிருக்கின்றனவாதலால், ஈசன் படைப்பும், கடலில் அவர் செய்திருக்கும் அற்புதங்களும் நன்றாக நமக்கு விளங்குகின்றன.

ஒவ்வோர் காலங்களில் நான் ஏகாந்தமாய்க் கப்பலில் என் அறைக்குள் உட்கார்ந்து எழுதிக்கொண்டாவது படித்துக்கொண்டாவதிருக்கையில், நடுக்கடலில் இருக்கிறேனென்றுகூட எனக்குப் பெரும்பான்மையாய் நினைப்பு இராதிருப்பதுமுண்டு. அப்படிக் கப்பலில் ஆட்டமாவது, சாய்வாவது சிறிதுமில்லாமல் அது மெதுவாய் இழைந்தாற்போல ஓடிக்கொண்டிருக்கையில், நான் என் கிரகத்திற்குள்ளே அறையில் இருப்பதுபோலவே எழுதிக்கொண்டிருப்பேன். கப்பலறையின் பலகணிவாயின் வழியாய்க் குனிந்து கப்பலின் கீழே பார்த்தால், ஏதோ பெரும்பூதமான பறவையொன்று எங்களைத் தூக்கிக்கொண்டு கரைகாணாத கருங்கடலுக்குமேல் பறப்பதுபோலும், நாங்கள் அதினமீதூர்ந்து ஆகாசஸஞ்சாரம் செய்வதுபோலுமிருக்கும். அந்திப்பொழுதில சூரியாஸ்தமன காலங்கள் வெகு அழகாயிருக்கும். அந்நேரத்தில் மேற்றிசையில் சூரியன் அஸ்தமிப்பதும், அதற்கெதிராகக் கீழ்த்திசையில் சந்திரன் அப்பொழுதுதான் உதயமாவதும், இவ்விரு விண்சுடர்களையும் ஏககாலத்தில் காண்பதும், இவற்றின் கிரணங்கள் கடலின் அலைகளிற்பட்டுப் பிரகாசிப்பதும் பார்வைக்கு எத்தனை அற்புதமாயிருக்கும்! ஆதலி

னால், "கடல்யாத்திரைசெய்து இவ்வற்புதத்தைக் கண்டவொருவன் நாஸ்திகனாயிருப்பானோ" என்று மீண்டும் வினவுகிறோம்.

அந்திப்பொழுதாய் இருட்டி வெகுநேரமானபின்னும் அவற்றின் காட்சி சிறப்புற்றிருக்கும். ஆகாயத்தில் மப்பு மந்தாரமில்லாமல் நக்ஷத்திரங்கள் தங்களுக்குள்ள எல்லாச் சிறப்போடும் பிரகாசித்துக்கொண்டிருக்கும். ககோளத்தின் வடகோடிவானில், ராசி மண்டலத்தில் ஸப்தரிஷி மண்டலமானது எவ்வண்ணஞ் சுடர்விட்டொளிர்கின்றதோ, அவ்வண்ணமே தென்கோடிவானிலும் திரிசங்கு ஸ்வர்க்கம் என்று பிரசித்தியாய்ச் சொல்லப்படுகிற ஒரு நக்ஷத்திரக்கூட்டம் பிரகாசித்துக்கொண்டிருக்கும். அன்றியும், ககோளத்தின் உத்தரகண்டத்தில் விஷ்ணுபதியென்கிற பாலவீதிமண்டலமென்னும் நக்ஷத்திரக்கூட்டம் எப்படியோ அப்படியே தக்ஷிணகண்டத்திலும் புள்ளடிவடிவுகொண்ட நக்ஷத்திரக்கூட்டம் ஒன்று உண்டு. இதுவுமன்றி மாஜிலான் மேகமென்று பெயர்கொண்ட பட்டைதீர்ந்தாற்போன்ற உருவமுள்ள மங்கலான நக்ஷத்திரக்கூட்டமொன்றும் அங்கே இருக்கிறது.

பின்பு கப்பலின் ஓரமாய் நின்று கீழே குனிந்து கடலைப்பார்த்தால், அந்த அற்புதத்தைச் சொல்லிமுடியாது! ஒரு பக்கத்தில் கப்பலானது அலைக்கு நடுவே கடலைக் கீறி ஊடுருவிச் சென்றுகொண்டேயிருக்கும்; அவ்வாறு கப்பல் செல்லும்போது அதன் இருபுறமும் வெண்ணுரை பெருமிதமாயெழுந்து மங்கலான ஒளியுள்ளதாயிருக்கும்; அப்பொழுதுதான் உருக்கிவிட்ட தங்கம்போல் அந்நீரில் பட்டைபட்டையாகக் கடல் வெள்ளத்தினடுவே தகதகவென்று ஒரு காந்தி பிரகாசிக்கும். அவ்வாறான காட்சியைக் காண்பது பெருமையே. அது மிக்க விசித்திரமானதும், உயர்ந்ததும், தரையில் காணக்கிடைக்காததுமாயிருக்கின்றது.

"தோள்கண்டார் தோளேகண்டார்; தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார்; தடக்கைகண் டாருமஃதே;
வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னா னுருவுகண் டாரையொத்தார்"

என்றவண்ணமாய், கடல்படுகாட்சிகளுள் ஒவ்வொன்றும் பார்ப்பவர்கள் தங்கள் கண்ணைக் கொட்டவும் மனம்வாராமல், விழித்த கண்கள் விழித்தபடி அதன்மீதே கண்ணாய்ப் பார்த்துக்கொண்டிருக்கும்படியான பெருந்தன்மையையுடையது. இப்படிக் கண்கூடாப் பார்த்துக்கொண்டிருக்கையிலும், "கண்ணைப்பிடுங்கி எதிரேவைப்பினும் கண்கட்டிவித்தை" என்பதுபோல அவை அனைத்தும், கனவோ நினைவோவென்று பிரமித்து இது இந்திரலோகமோவென்று எப்படிப்பட்டவர்களும் மயங்கத்தக்க காட்சியினையுடையவையாயிருக்கின்றன.

தூக்குத்தூக்கி.

ஒரு பழையகதை—(தொடர்ச்சி.)

இராஜகுமாரத்தியான சந்திரமுகியானவள் பயந்தோடின திருடனைப் பார்த்து மந்திரிகுமாரனென நினைத்துப் பின்தொடர்ந்தோட, அவளைத் தேடிக்கொண்டு செல்லமும் தூக்குத்தூக்கியும் ஓடினார்களென்று சொன்னோமே. அவ்வண்ணமே இரவெல்லாம் ஓடி விடியநேரத்தில் ஒரு பெருங் காட்டினிடையே போய்ச் சேர்ந்தார்கள். பொழுதுவிடிந்ததுகண்டு சந்திரமுகி மந்திரிகுமாரனைப்பார்க்கப் பேராவல்கொண்டவளாகிக் குதிரையை வெகுவேகமாய்த் துரத்தி முன்னேஓடின புருஷனைப் பிடித்தாள் ஐயோ! கிட்டப்போய்ப் பார்த்தாள்; அவன் இராமசந்திரனல்ல; யாரோ வேறொரு புதுமனிதனாயிற்றே! அவனைப் பார்த்தவுடனே முதலில் திடுக்கிட்டு மனங் குழம்பினாளாயினும், இச்சமயத்தில் தைரியத்தைக் கைவிட்டால் உயிர்போய் விடுமென்றறிந்து வெகு தைரியங்கொண்டு கத்தியைக் கையிலெடுத்து அக்கள்ளனை ஒரேவெட்டாய் வெட்டிப்போட்டுக் குதிரையைப் பிடித்துக் கொண்டாள். தன்னைத் துரத்திவருவது பேயோ பிசாசோவென்று கள்ளன் பயந்தோடினமையால் சந்திரமுகிக்குப் பிராணன் தப்பியது.

கள்ளனைக் கொன்றபிறகு சந்திரமுகியானவள் ஒரு மரத்தடியிலே போய் நின்று தன் பிராணநாதனை நினைத்துப் புலம்பி; மனிதப்பூண்டில்லாத இப் பெருங்காட்டில் புலி கரடிகளுக்கு இரையாகவா நான் பெண்பிறந்தேனென்று தன் விதியை வெறுக்கலானாள். அத்தருணத்தில் செல்லம் அவ்விடம் போய்ச் சேர்ந்தாள். செல்லத்தைக் கண்டபோது சந்திரமுகிக்கு உண்டான ஆநந்தத்தை என்னென்று சொல்லலாம். காட்டுத்தீ சூழ்ந்துகொண்ட மரத்தில் குளிர்ந்தமழை பொழிந்ததுபோலாயிற்று; ஒருவரையொருவர் கட்டியணைத்துக்கொண்டு ஆநந்தக்கண்ணீர் பொழிந்தார்கள். இத்தருணத்தில் தூக்குத்தூக்கியும் வரக்காணவே கண்ணைக்கெடுத்த தெய்வம் மதியைக்கொடுத்ததாமென்பதுபோல், என்னதான் மூடனானாலும் இந்தச் சமயத்தில் புருஷத்துணையாய் இவன் வந்துசேர்ந்தானேயென்று மிகவும் சந்தோஷமடைந்தார்கள். பிறகு அவர்கள் அப்படி ஓடிவந்த வரலாறுகளைப்பற்றிச் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்து, பின்பு சுதேசம்போவதைவிட வேறு எங்கேயாவது போய்ப் பிழைப்பதே நல்லதென்று நிச்சயித்து, இரண்டுபெண்களும் இரண்டு குதிரைகள்மேல் ஏறிக்கொண்டு தூக்குத்தூக்கியை முன்னே வழிகாட்டிக்கொண்டு ஓடும்படி சொன்னார்கள். எத்தனையோகாசு வருத்தப்பட்டுப் பொறுக்கிக் குதிரைகளை நான் வாங்கியிருக்க, அவற்றின்முன்னே ஓடும்படியாகவே ஈசன் நமது தலையில் எழுதினானே! விதி யாரைத்தான் விட்டது என்று சிந்தித்துக்கொண்டே தூக்குத்தூக்கி அவர்கள் கட்டளைப்படியே குதிரைகளுக்கு வழிகாட்டிக்கொண்டு ஓடினான்.

பெருங்காட்டின் நடுவே போம்போது வழியிலே பல வருத்தங்கள் அநுபவித்துக் கடைசியில் தூக்குத்தூக்கியின் தந்தை முதலானவர்கள் வசித்துக் கொண்டிருந்த புஷ்பபுரம்போய்ச் சேர்ந்தார்கள். சேர்ந்தவுடனே தூக்குத் தூக்கி அது தன் சொந்த ஊரென்று அதிக சந்தோஷமடைந்தானாயினும், தந்தைவீட்டுக்குப் போகாமலே தனியாய் மூன்றுமாடியுள்ள மிகப்பெரிய மாளிகையொன்று குடிக்கூலிக்கு வாங்கி அதில் அப்பெண்களிருவரையும்

இறக்கினான். முழுமூடனான தூக்குத்தூக்கிக்கு இக்காலத்தில் இவ்வளவு புத்தியும் சாமர்த்தியமும் உண்டானது நம்முடைய நல்லகாலந்தானென்று அபபெண்கள் மிகவும் மனங்களித்தார்கள். இதற்குள் இராத்திரி சிறிது நேரமாய்ப் போகவே இனிச் சாப்பாட்டுக்குச் சமையல்செய்ய முடியாதென்று தாகுத்தூக்கி கோயிலுக்குபபோய்ப பலகாரங்கள் வாங்கிவந்தான். அதை ஆளுக்குககொஞ்சமாய்ப் புசித்துவிட்டு, பகலெல்லாம் பிரயாணம் செய்த அலுப்பினால் பெண்கள் இருவரும் உடனே படுத்துத தூங்கிப்போனாகள்.

தூக்குத்தூக்கி குதிரைச்சேணத்தில் ஒளித்துவைத்திருந்த உண்டிகள் இப்போது அவனுக்கு மிகவும் உபயோகமாயின. அவன் அன்று ராத்திரி சிறிதும் தூஙகவேயில்லை; அந்த உண்டிகளையெல்லாம் எடுத்துப பத்திரமாய் ஒரு அறையில் பூட்டி ஒரு உண்டியைமாத்திரம் கையிலெடுத்துக்கொண்டு போய் மாற்றிச சாப்பாட்டுக்குவேண்டிய சொம்பு தவலை முதலிய எல்லாச் சாமான்களும் வாங்கிவைத்தான்.

மறுநாள் முதல் தூக்குத்தூக்கி தானே ராஜகுமாரத்திக்கு எல்லாப் பணிவிடைகளும் செய்து ஒரு குறைவும் இல்லாமல் அவளைக் காப்பாற்றிக்கொண்டுவந்தான். அவன் செய்தது இவ்வளவுமாத்திரமேயோ? தான் உயர்ந்த ஆடையாபரணங்கள் வாங்கித தரித்துக்கொண்டு, ராஜகுமாரத்திக்குக் கரிசசட்டி கழுவுகிற வேளைபோக; மற்றககாலங்களில நான்கு குதிரைகள் பூட்டிய பெரிய ரதஙகளில் ஏறிககொண்டு அப்பட்டணம் முழுதும் சுற்றுவான். அவனைப் பார்ப்பவர்களெல்லாரும் இவன் யாரோ ஒரு மகாராஜாவென்று மிகவும் ஆச்சரியப்படுவார்கள். மறுபடி வீட்டிற் புகும்போது இந்த ராஜவேஷங்களையெல்லாம் கீழ்மாடியிலேயே களைந்து குதிரைகளையும் வண்டியையும் தான் புதிதாக நியமித்துக்கொண்ட வேலைக்காரர் வசம் ஒப்புவித்து, மறுபடி கரித்துணியுடுத்திக்கொண்டு சாதாரணமான தூக்குத்தூக்கிபோலவே மேலேபோவானாகையால், மூன்றாவது மாடியிலிருந்த பெண்களுக்கு இச்செய்தி ஒன்றும் தெரியாமலே இருநதது. இப்படியே வெகுநாள் நடந்துவந்தது.

நல்லது, சந்திரமுகியின் தகப்பனான மண்டலேசுவரன்செய்தி என்னவென்பீர்களே? தான் அவ்வளவு பத்திரமாய் நிர்பந்தத்தில் வைத்திருந்த பெண் ஓடிப்போனாள் என்ற செய்தியை வெளியிட்டால் வெட்கக்கேடென்று அவன் அதை எங்கும் பிரசித்தபபடுத்தாமலே நாநாதேசங்களிலும் போய்த் தேடிப பார்த்துவரும்படி தூதர்களைமாத்திரம் அனுப்பிவைததிருந்தான்.

இப்படியே மூன்றுநான்கு மாதங்கள் சென்றன. புஷ்பபுரத்தில் தூக்குத்தூககியின் ஆதரவாலேயே சந்திரமுகியும் செல்லமும் சுகமாய் வாழ்ந்துகொணடிருந்தார்கள். தூக்குத்தூக்கி ஒருநாள் புஷ்பபுரம் அரசனைப் போய்பபார்கக யோசித்து வெறுங்கையாய் ராஜதரிசனத்துககுப் போகக்கூடாதென்று தான் புஷ்பபுரத்துக்கு வரும்பொழுது காட்டில் கண்டெடுத்த ஒரு ரத்நத்தைத் தங்கத்தாம்பாளத்தில் வைத்து மகமல்பட்டால் மூடிக் கட்டிக் கையில் எடுததுககொண்டு விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிந்து வண்டியின்மேலேறி அரண்மனைக்குச்சென்றான். இவன் வரும் ஆடம்பரத்தையும் மேலேதரித்திருந்த ஆடையாபரணங்களையும் பார்த்தபேர்கள் எல்லாரும் இவன் மண்டலாதிபதியோ அல்லது மகாப்பிரபுவோ என்றெண்ணினார்கள். அரண்மனை வந்தவுடன் அரசனும் அப்படியே

எண்ணி அவனை எதிர்கொண்டு அழைத்துவந்து ஸமமான ஆஸநங்கொடுத்து உட்காரவைத்தான். உட்கார்ந்தவுடன் தூக்குத்தூக்கி கொடுத்த வெகுமதியைப் பார்த்து அவ்வரசன் மிகவும் ஆச்சரியமடைந்து, "என்னிடம் ஒரு ரத்நம் இதுபோலிருக்கிறது. அதற்கு சோடி சேர்க்கவேண்டுமென நெடுநாளாய்த் தேடுகிறேன்; இதுவரையில் அகப்படவில்லை; இன்றுதான் தங்களிடத்தில் கிடைத்தது" என்று சொன்னான். அதுகேட்டுத் தூக்குத்தூக்கி, "தங்களிடமிருக்கும் ரத்நத்தைவிட இது வெகு உயர்ந்ததாக இருக்கும். இதற்குச் சமமானது இந்த உலகத்தில் கிடையாது" என்று சொல்ல, அரசனுக்குத் தன் ரத்நம்தான் உயர்ந்ததென்று கோபம்வந்துவிட்டது. என் ரத்நம் உயர்ந்தது, உன் ரத்நம் உயர்ந்தது, என்று அவர்கள் சண்டைபோட ஆரம்பித்தார்கள். பிறகு இப்படி வீண் வாய்ச்சண்டையில் பிரயோசனமில்லை; இரண்டு ரத்நங்களையும் பந்தயம்கட்டிப் பரீக்ஷித்துப்பார்ப்போம். யார்பக்கம் பந்தயம் ஜயிக்கிறதோ அவர் ரத்நமே உயர்ந்த ரத்நம் என்று தீர்மானித்து அப்படியே பந்தயம் கட்டிக்கொண்டார்கள். அரசன் தான் பந்தயம் இழந்தால் ராஜ்யத்தைத் தூக்குத்தூக்கிக்கு விட்டுவிட்டுப் பதினான்கு வருஷம் அடிமைப்படுவதாகச் சொன்னான். தூக்குத்தூக்கி தானும் ராஜகுமாரன்போல் அபிநயித்து, அப்பொழுது தன் ராஜ்யம் வெகு தூரத்திலிருந்தபடியால் அதற்குப் பதிலாக இருபத்தெட்டு வருஷம் அடிமைப்படுவதாகச் சொன்னான். பந்தயம் ஏற்பாடாகிவிட்டது. முதல்தரமான ரத்நவியாபாரிகளும் பாடம் பார்க்கப்பட்டவர்களும் வந்து இரண்டு ரத்நங்களையும் பரீக்ஷிக்க ஆரம்பித்தார்கள். ஒவ்வொருவிதத்திலும் தூக்குத்தூக்கியின் ரத்நமே உயர்ந்ததாக இருந்ததனால், அரசனுடைய ரத்நம் அதற்கு இரண்டாவதுதான் என்று தீர்மானித்தார்கள். அரசன் ஸத்தியத்துக்குக் கட்டுப்பட்டவனாகையால் தான் சொன்னபடியே ராஜ்யத்தையும் தன்னையும் ஒப்புக்கொள்ளவேண்டுமெனத் தூக்குத்தூக்கியை வேண்டிக்கொண்டான்.

தூக்குத்தூக்கி படபடப்பாய் ஒருகாரியமும் செய்யப்பட்டவனல்ல; ஒவ்வொன்றையும் நன்றாய் யோசித்துச் செய்யும் திறமுடையவன். இப்பொழுது நாம் நமக்கு வந்திருக்கும் பதவியைக் கண்டு குதிக்கக்கூடாதென்று எண்ணி அவன் அரசனைநோக்கிச் சொன்னதாவது: "ஸ்வாமி, நான் வெகு சிறியவன்; இவ்வளவு சிறுவயதில் ஏதோ நல்லபாக்கியவசத்தால் இந்த ராஜ்யம் கிடைத்ததாயினும் இவ்வளவு பாரம்வஹிக்க என்னால் ஆகாதாகையால், நான் சொல்லுவதைச் சற்று செவிகொடுத்துக் கேட்கவேண்டுகிறேன்: தாங்கள் முன்போலவே ராஜாவாக இருக்கவேண்டும்; நான் தங்களுக்குப் பிரதிநிதியாக இருந்துகொண்டு ஸகலகாரியங்களையும் நடத்திவருகிறேன். உத்தரவுகளுக்கும் கடிதங்களுக்கும் கையொப்பம் தாங்களே செய்து, எல்லாம் தாங்கள் நேராக நடத்துவதுபோலவே காட்டிவரவேண்டும்; ஆனால் செய்யும் வேலையெல்லாம் நானேசெய்கிறேன்" என்று சொல்லி முடித்தான்.

அதைக்கேட்கவே அரசனுக்குப் போனபிராணன் திரும்பிவந்தாற்போலாயிற்று. அப்படியே ஆகட்டுமென்று அரசன் சம்மதிக்க, அந்த க்ஷணம்முதல் ராஜப்பிரதிநிதி வேலையை ஒப்புக்கொண்டு கையெழுத்துப் போடுகிறது ஒன்றைத்தவிர மற்ற எல்லா ராஜகாரியங்களையும் தூக்குத்தூக்கியே நடத்திவந்தான். அவனுக்கு யுவராஜனெனப் பட்டப்பெயர் அளிக்கப்பட்டது. முன்போலவே காலையிலும் இரவிலும் சந்திரமுகி இட்ட

வேலையைச் செய்பவனும், பகல்முழுதும் ராஜ்யபாரம் வகிப்பவனும் இருந்துகொண்டிருந்தான். ராஜநீதிகளைச் செம்மையாய்ப் படித்திருந்தவனுகையாலே ஜனங்களுக்கு அநேக நன்மைகளைத் தினந்தோறும் செய்து வந்தான் எல்லோரும் இவனை தர்மராஜா என்று புகழத்தொடங்கினார்கள். அறிவில் சிறந்த மந்திரிகளெல்லாம் கிருஷ்ணசிங்கின் புத்தியை மிகவும் மெச்சினவர்களாகி, இப்படிப்பட்ட மகாபுருஷன் பேர் ஊர் ஒன்றும் சொல்லாமல் இருப்பிடம் கூடத்தெரியாமல் தன்னந்தனியே ஒளிப்பாட்டமாய வீட்டுக்குப் போகவேண்டிய நிமித்தமென்ன? இவர் இருப்பிடம் முதலியவைகளைக் கண்டறியவேண்டுமென்று ஆசைகொண்டு தெருவுக்குத் தெரு ஒரு தூதனை அனுப்பி, யுவராஜாவின் வண்டிபோகும் இடத்தை உற்றுப்பார்த்துவரச் சொன்னார்கள்.

கிருஷ்ணசிங்கு குடியிருந்த தெருவுக்கும் ஒரு தூதன் போய் வண்டி நுழையும் வீட்டைப் பார்த்து, இதுதான் யுவராஜாவின் வீடு என்றறிந்து கொண்டான். அப்போது மூன்றும்மாடியில் சந்திரமுகி எண்ணெயிட்டுக் கொண்டிருந்தாள். கன்னங்கறேலென்று கறுத்து நீண்ட அவள் தலைமயிரை அவிழ்த்துவிட்டு ஒவ்வொன்றுக்கும் தாதி செல்லம் வாதனைதைலம் தடவிக் கொண்டிருந்தாள். இவற்றையெல்லாம் கண்டு அங்கே இருப்பது யுவராஜாவின் மனையாள் என்றும், அவ்வளவு அழகான கேசங்கள் இவளுக்கு இருக்கிறபடியால் அதிக சௌந்தரியமுள்ளவளாய் இருக்கவேண்டுமென்றும் நிச்சயித்து, உடனே அச்செய்திகளையெல்லாம் தூதன் மந்திரிகளிடத்திலும் பெரிய அரசனிடத்திலும் சொன்னான். அதுகேட்டு அவர்கள், ஆயின் அவ்வளவு பெருமைபெற்ற ரூபவதியை நாம் ஒருதடவை பார்க்கவேண்டுமே, பார்க்காவிடில் ஈச்வரன் கண்களைகொடுத்ததற்கு என்னபலன் என்று யோசித்து அதற்கு ஒரு ஏற்பாடுசெய்தார்கள். அதாவது, அந்த ஊரில் காளிகோவில் ஒன்றுண்டு. அவ்விடத்தில் வருஷம் ஒருதடவை வழக்கமாய் ஊஞ்சல் உத்ஸவம் ஒன்று நடப்பதுபோலும், அப்பொழுது ஒவ்வொருவரும் தன் ஸம்ஸார ஸஹிதம் வந்து ஊஞ்சல் ஆடிப் போகவேண்டுமென்று ஒரு தஸ்தாவேஜு ஏற்படுத்தி, பெரிய அரசனைக் கையொப்பம்வைக்கச்சொல்லிப் பழைய தஸ்தாவேஜுகளின் மத்தியில் வைத்துவிட்டார்கள். ஏதோ அநேக அவஸ்தாப்பங்களால் பத்துப் பதினைந்துவருஷம் நின்றுபோயிருந்த ஊஞ்சல் உத்ஸவத்தை அந்த வருஷமுதல் யுவராஜா நடத்தவேண்டுமென்றும் அவரிடம் தெரிவித்தார்கள். யுவராஜாவான கிருஷ்ணசிங்கு தான் ராஜ்யபரிபாலனம்பண்ண ஆரம்பிக்கும்பொழுது பழைய கட்டுகள் ஒவ்வொன்றையும் பார்த்திருந்தும் அந்த மாதிரியான பதிவு ஒன்றிலும் இல்லாதிருந்தபடியால், இது மந்திரிகள் செய்த சூது என்றும், சந்திரமுகியை மாடியில் அவர்கள் என்றையதினமாவது பார்த்திருக்கவேண்டுமென்றும் அறிந்துகொண்டானாயினும், அவளை நம்முடைய பத்நியாக ஏற்படுத்திக்கொள்ள இது ஒரு நல்லசமயமாகவே வாய்த்ததென்று தானும் சந்தோஷமடைந்தவனாகி, ஊஞ்சல் உத்ஸவத்துக்காக என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளுக்கெல்லாம் கட்டளையிட்டு, உத்ஸவநாள்வரையில் பழையமாதிரியாகவே நடந்துவந்தான்.

உத்ஸவதினம் வந்துவிட்டது. அன்றுகூடக் கிருஷ்ணசிங்கு வழக்கம்போலவே காலையில் ஸ்நானஞ்செய்து அண்டாக்களில் ஜலம்நிரப்பி இன்னும் மற்றக்காரியங்களும் செய்து சாப்பாட்டை முடித்துக்கொண்டு

பத்துநாழிகைக்குமேல் அரண்மனைக்குச்சென்றான். ஸாயங்காலந்தான் ஊஞ்சலுக்கு முகூர்த்தம் வைத்திருந்தது. அன்று பகல் பதினைந்துநாழிகைக் குச் சந்திரமுகியானவள் தாதி செல்லத்தினிடம் பின்வருமாறு துக்கிக்க லானாள். "ஐயோ! ராமசந்திரனை நம்பி நான் வீணாய்க் கெட்டுப்போனேனே, ஊரைவிட்டுப் புறப்பட்டு ஏறக்குறைய ஒருவருஷகாலமாயிற்று. அவ்விடத்தில் எவ்வளவோ நல்ல ஸ்திதியிலிருந்து இங்கு ஸாதாரண மனிதர்போல நாம் இருக்கிறோமே! இந்தக் கஷ்டகாலம் எப்பொழுது நீங்குமோ தெரியவில்லையே; மண்டலேச்சுவரருடைய குமாரத்தியாகிய எனக்கு இப்படிப்பட்ட கஷ்டதசைவந்ததே! என் தகப்பனாருக்கு நான் ஒரேபெண். நான் வந்துவிட்டபிறகு அவர்கள் என்னவானார்களோ தெரியவில்லையே! நல்லகாலமிருந்து அவர் இவ்விடம் நம்மைத் தேடிவந்து அழைத்துப்போகலாகாதா? நான் இருக்குமிடமிருந்தால் கலியாணஞ்செய்துகொள்ள எத்தனையோ ராஜகுமாரர்கள் என்னை நாடிவருவார்களே. கொஞ்சம் அவசரப்பட்டு யானை தன் தலையில் தானே மண்ணைவாரிப் போட்டுக்கொள்வதுபோல நானே என்னைக் கெடுத்துக்கொண்டேன் என றிவ்வாறு புலம்பித் துக்கத்தால் சோர்ந்தவளாய்க் களைத்துவிழுந்தாள். பகல் பதினைந்துநாழிகைவேளை வெயிலினாலும் களைப்பினாலும் கொஞ்சம் அயர்ந்து தூங்கிப்போனாள்.

அப்பொழுதுதான் அரண்மனையிலிருந்து காளிகோவிலுக்குப் போக எல்லோரும் புறப்பட்டார்கள். யுவராஜாவான கிருஷ்ணஸிங்கு அன்றுமுதல் தனக்குமுன் விருதுகள் போகலாம் எனத் திட்டஞ்செய்யவே, அவர்முன் அநேக வாத்தியங்களும் போர்வீரர்களும் சென்றார்கள். ராஜவீதியில் வரும்பொழுது தாதி செல்லம் ஒருநாளும் அந்தத் தெருவில் கேளாத ராஜவாத்தியங்களைக் கேட்டுத் திடுக்கிட்டு மண்டலேச்சுவராதாம் தாங்களிருக்குமிடம் கண்டுபிடித்து வந்தார்களோ என்று நடுநடுங்கிச் சந்திரமுகியை எழுப்பினாள். எழுப்பி அவளிடம் சங்கதியைச் சொல்லிக்கொண்டிருக்கையிலே தானே வாத்தியங்களெல்லாம் அந்த வீட்டுவாயிலிலேயே வந்துநின்றன. இவைகளையெல்லாம் காணவே அப்பெண்களுடைய பயம் அதிகமாயிற்று. தகப்பனார் வரவைச் சந்தோஷத்துடன் எதிர்பார்த்தவளாயினும் குற்றவாளியாகையால் சந்திரமுகியின் மனம் பதைத்தது. இதற்குள் தாதி செல்லம் கீழே ஓடிப்போய் பார்த்து மறுபடியும் வேகமாய் வந்து, வாயிலில் இறங்கினவன் தூக்குத்தூக்கி என்று சொன்னாள். செல்லம் சொல்வதைக் கேட்டவுடன் இவளுக்கு ஏதோ மதிமயக்கம் என்றெண்ணிச் சந்திரமுகி தானே கீழே யிறங்கினாள்.

இதற்குள் யுவராஜாவான கிருஷ்ணஸிங்கும் மேலே போய்க்கொண்டிருந்தான். சந்திரமுகியும் கிருஷ்ணஸிங்கும் நடுவழியில் ஸந்தித்தார்கள். தூக்குத்தூக்கிதான் இவன் என்று நிச்சயமாய்த் தெரிந்துவிட்டபோதிலும் அப்பொழுது அவன் முகத்திலிருந்த களையையும் தரித்திருந்த ஆடையாபரணங்களையும் பார்க்கும்பொழுது தன்னை அறியாமல் ஒரு வணக்கமும் மரியாதையும் சந்திரமுகிக்கு வந்துவிட்டன. ஓ இதென்ன ஆச்சரியம்! இரண்டு நாழிகைக்குமுன் இவ்விடம் வேலைசெய்துகொண்டிருந்த இவன்—இவர்! இவ்வளவு சீக்கிரம் எப்படி ராஜாவாயிருக்கலாம் என்று அவள் திகைத்த போதிலும், கிருஷ்ணஸிங்குக்கு வணங்கவேண்டியதாயிருந்தது. தாங்கள் அரசரானவிதம் என்னவென்று சந்திரமுகி கேட்க, எல்லாம் சற்றுப்பொறுத்

துச் சொல்லுகிறேன்; இப்பொழுது அவகாசமில்லை; இந்தப் பூணாரங்களைப் போட்டுக்கொள்; ஊஞ்சலுத்ஸவத்துக்குப் போகவேண்டும் என்று சொல்லி, தன் கையில் கொண்டுவந்த விலைஉயர்ந்த ஆபரணங்களுள்ள பெட்டி ஒன்றைச் சந்திரமுகியிடம் தூக்குத்தூக்கி கொடுத்தான். இரண்டுநாழிகைக்குமுன் தன் கட்டளைக்குக கிருஷ்ணசிஙகு உட்பட்டவனாயிருந்த போதிலும் அபபொழுததான் அவன் கட்டளைக்குக கீழ்பபடியவேணடுமென்று அவன் முககுறிகளால் கண்டுகொண்டு மறுமொழிசொல்லாமல் நகைகளை அணிந்துகொண்டாள். அதறகுள் பெரியராஜாவானவன் நாழிகையாய்விட்டதென்று யுவராஜாவுககுத தெரிவித்தான. இதையும் கேட்டுச் சந்திரமுகி வியபபுற்று ஏதோ இருக்கிறது தெரியவில்லை; எல்லாம் ஸாவகாசமாய் விசாரிப்போமென்று எண்ணிக்கொண்டு இருக்கையில், தூக்குத்தூககி அவளைக் கைப்பற்றி அழைத்துககொண்டு வண்டி ஏறினான். எல்லோரும் காளிகோவிலுக்குச சென்றார்கள். செய்தமுயற்சிகள எல்லாம் யுவராஜாவுக்கும் சநதிரமுகிக்குமாகையால் அவர்கள் இருவரையும் வெகுகாலம் ஊஞ்சலில் வைத்து ஆட்டி மந்திரிகளும பெரியராஜாவும் கண்குளிர்ந்தார்கள். பெரியராஜாவும் அவர் பட்டமஹிஷியும் யுவராஜாவுக்கும் சந்திரமுகிக்கும் இரண்டு முத்தாஹாரம் பரிசுகொடுத்தார்கள். யுவராஜா தன் கழுத்தில் போட்ட ஹாரத்தை வீட்டுக்குப போகும்பொழுது எடுத்துக்கொண்டு போவோமென்றெண்ணி அவ்விடம் இருந்த ஒரு புன்னங்கிளையில் மாட்டிவைத்தான். மற்றும் அநேகர் ஊஞ்சலாடினார்கள். சூரியாஸ்தமனம்வரையில் எல்லாரும் ஊஞ்சலாடிவிட்டு வீட்டுக்குத் திரும்பினார்கள். போகும் வழியெல்லாம் "மஹாராஜாவே நான் இரண்டு வாரமாய்க் காத்திருக்கிறேன், என் மனுவுக்குச் சீக்கிரம் உத்தரவுசெய்யக் கோருகிறேன்" என்று வெகுபேர் சொல்லிக்கொண்டதற்கெல்லாம் "ஆகட்டும், நாளை உத்தரவாகும்" என்று கிருஷ்ணசிங்கு பதில் சொல்லிக்கொண்டேபோனான். முதல்பாடபுஸதகம் பதினோராம்பக்கம் படிக்கத்தெரியாத இவருக்கு என்னபதவி வந்துவிட்டது, ஆச்சரியம்! என்றெண்ணி மனமகிழ்ந்துகொண்டே சந்திரமுகி தூக்குத்தூக்கியுடன் தன் வீடுவநது சேர்ந்தாள்.

வீடுவந்ததும் கிருஷ்ணசிங்கைப்பார்த்து "தாங்கள் எவ்விதமாய் அரசனானீர்கள்" என்று சந்திரமுகி வினவ, அவன் "அதிக ஒடுக்கமாயிருக்கிறது, சட்டைகளைக் கழற்றிவிட்டுச் சொல்லுகிறேன்" என்று சட்டைகளைக் கழற்றினான். கழற்றவே, அரசன் போட்ட முத்தாஹாரம் கழுத்தில் இல்லாமலிருக்கக்கண்டு, "ஆகா! முத்தாஹாரத்தை மறந்து புன்னங்கிளையில் மாட்டி வந்துவிட்டேன்; நொடிபபொழுதில்போய் எடுத்துவருகிறேன்" என்று புறப்பட, சந்திரமுகி கையைப் பிடித்துக்கொண்டு, "நான் மண்டலேச்சுவரன் மகள் என்பது தங்களுக்குத் தெரியாதா; அந்தமாதிரி நூறு முத்துமாலை செய்துபோடுகிறேன் அதற்காக இருட்டில் போகவேண்டாம" என்று தடுத்தாள். "அற்பமானாலும் வெகுமதியாக ஒருவர் நமககுக் கொடுத்ததை அன்புடன்பெற்று ஜாக்கிரதையாய் வைத்திருந்தாலல்லவோ கொடுத்தவனுக்கு நம்மிடம் அன்பிருக்கும். நாம் அலக்ஷியம் செய்ததாகத் தெரிந்தால் கொடுத்தவர்கள் மனம் நோகும். நீ உலகஸமாசாரம் தெரியாதவளாகையால் இந்தமாதிரி பேசுகிறாய்" என்று சொல்லி வெகு இருளாயிருந்தபோதிலும் ஹாரத்தை எடுத்துவர யுவராஜாவாகிய கிருஷ்ணசிங்கு ஓடினான்.

பகலிலிருந்த சந்தடிகள் எல்லாம ஓய்ந்துபோனபடியால் அவ்விடம் நிச்சப்தமாயிருந்தது. இருட்டுக்காலத்திலே மரமடர்ந்த தோப்பில் அந்த காரத்துக்குக் கேட்கவேண்டுமோ? எங்கும் ஒரே இருட்டாக இருக்கவே, ஹாரம் வைத்த இடம்கூடத் தெரியாமல் அங்குமிங்கும் கையாலேயே தடவிப் பார்த்து, கடைசியாய் ஹாரமிருககும் கிளையிலேயே கிருஷ்ண சிங்கு கையை வைததான். அவ்விடததில் மிக்க பசியுடன் படமெடுத்து ஆடிக்கொணடிருந்த காலஸர்ப்பம் ஒன்று அவனைத் தீண்டிவிட்டது; உடனே ப்ரக்ஞை போய் அவன் கீழேவிழுந்தான். அன்று பகலிலே தான் கலியாணம்செய்துகொண்ட சந்திரமுகி இருக்கிறாள்; அவளுடன் இன்னும் புருஷபதவியில் ஒரு பேச்சுக்கூடப் பேசினானில்லை. புஷ்பபுரத்தில் தனசிங்கு முதலான பந்துக்கள் என்னவானார்களோ அதையும் விசாரித்தானில்லை. ராஜ்யபாரங்களையெல்லாம் இவன்மேல் போட்டுவிட்டு இவனையே நம்பினவனாகப் புஷ்பபுரம் பெரியராஜா இருக்கிறான்; அவனையும் உபேக்ஷை செய்துவிட்டு, இவனுக்கே சந்திரமுகியைப பாணிக்ரஹணம் செய்விக்க வேண்டுமெனறு ஆதிமுதல் ஆசைகொண்டிருந்த மண்டலேச்சுவரனையும் மோசம்செயதுவிட்டு, அநுபவிக்கவேண்டிய சுகங்கள் வெகுவாயிருக்க அவைகளையும் அநுபவிகக அதிஷ்டமில்லாதவன்போல அரைநிமிஷததில் யுவராஜா சிவலோக பிராபதியானான். ஆனாலும் பிற்பாடு அவன்பெற்ற பாக்கியங்களைக் கேளுங்கள்.

புஷ்பபுரம் பெரியஅரசனுக்குப் புத்திரன் என்னும் பெரும்பாக்யம் கிடையாதென்று முனனமே சொல்லியிருக்கிறோமே. அவனுக்கு ஒரு பெண் ரத்நம் உண்டு. அழகில்மாததிரம் ரத்நம் என்றால் போதாது; அவளுடைய நன்னடக்கையும் தெய்வபக்தியும் இவ்வளவவ்வளவென்று சொல்லமுடியாது. அவளுக்கு இந்துகலை என்று பெயர். இந்துகலையானவள் பிரதி தினம் இராத்திரி இந்தக் காளிகோவிலுக்கு வந்து அம்பிகையைப பூசித்துவிட்டுப் போவது வழக்கம். அவளுடைய அறைககும் காளிகோவிலுக்கும் ஒரு சுரங்கம் உண்டு. அதன்வழியாக வந்து அவள் பூசைசெய்வது வழக்கம். வழக்கப்படியே அன்று இராத்திரியும் அவள் கோவிலுக்குப் போய் ஸமீபத்திலிருந்த பொய்கையில் நீராடிவிட்டு அம்பிகையைப் பூசை செய்து துதிசெய்து எல்லாம் முடித்துக்கொண்டு வீட்டுக்குப் போகுமுன் "அம்பிகையே, இன்று பகல் ஊஞ்சலுத்ஸவத்துக்கு ஊரிலுள்ள சிறுபெண்களெல்லாரும் தங்கள் தங்கள் புருஷர்களுடன் வந்தார்கள்; எனக்கு அந்தப் பாக்கியம் என்று அளிப்பாயோ தெரியவில்லை. அதிபுத்திமானும், நல்ல நடக்கையுள்ளவனுமான அழகுள்ள ஒரு புருஷனை எனக்குக் கொடுத்தருள்வாயாக" என்று வேண்டினாள். வேண்டி வாய்மூடும்முன்னமே "என் ஸந்நிதியில் ஒரு இளைஞன் படுத்திருக்கிறான், அவனே உன் புருஷன்" என்று அசரீரிவாக்கு ஒன்று பிறந்தது. அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு அபபடியே போய்ப்பார்கக, அங்கே கிருஷ்ணசிங்கு பிணமாய் விழுந்துகிடந்தான். அதுகண்டு, தனக்குக் கலியாணம் நிஜமாகவே நடநதிருந்து, புருஷன் இறந்தால் எப்படியோ அப்படியே அவனை யதார்த்த புருஷனாகப் பாவித்துத் தலையை விரித்துக்கொண்டு ப்ரேதத்தைக் கட்டித் துக்கம்பொறுக்கமாட்டாமல் "இத்தனைநாள் செய்த பூசைக்கெல்லாம் இந்த ப்ரேதந்தானாபலன்" என்று அம்மகள் வாய்விட்டுக் கதறத்தலைப்பட்டாள். அவள் புலம்ப ஆரம்பித்த இரண்டுநாழிகைக்கெல்லாம் மற்றொரு அசரீரி

வாக்கு உண்டாயிற்று. "செய்தபூசைக்குப பலன் இதுதானா என்று நீ என்னை வெறுக்கவேண்டாம், இவைகளெல்லாம உன்னைப பரீக்ஷிக்க நான் செய்தகாரியங்களேயன்றிவேறல்ல. எழுந்திருந்து புஷ்கரணியில் மறுபடி ஸ்நானஞ்செய்து என் ஸந்நிதிக்கு வந்து என் பாதாரவிந்தங்களி லிருக்கும் குங்குமத்தில் கொஞ்சம் எடுத்துச் செத்துக்கிடக்கும் உன புருஷன்முகத்தில் இடுவாயாகில் உடனே அவன் பிழைப்பான்" என்று சொல்லிற்று. அந்தப்படியே இந்துகலையும் செய்ய, கிருஷ்ணசிஙகு தூங்கியெழுந தவன்போல விழிததுக்கொணடான்.

அவன் விழித்துக்கொண்டவுடன் ஹாரத்தையெடுத்துக் கழுத்தில் தரித்துக்கொண்டு வீட்டுக்குப் புறபபட்டான். உடனே இந்துகலை கையைப் பிடித்துக்கொண்டு "அம்பிகை தஙகளை எனக்குப் புருஷனாக அளித்தாள்; நான் இந்த ஊர் ராஜாவின் மகள். தயவுசெயது அரணமனைககு வந்து என்னை மணம்புரியய பிரார்த்திக்கிறேன்" என்றாள். அதைக கேட்டதும் அவன் திடுக்கிட்டு, இதென்ன ஆச்சரியம்! நான் ஹாரம் எடுக்க வந்தயிடத்தில் யாரோ ஒரு பெண் என்னைப புருஷனாகப் பாவித்துப் பேசுகிறாளே என்று வியபபுற்றவனாய் "நான் இன்று பகல்தான மண்டலேச்சுவரன் மகள் சந்திரமுகியை மணம்புரிந்தேன், நீ யாரோ எனககுத தெரியாது, என் பத்நி அல்ல" என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே சநதிரமுகியும் செல்லமும் அவ்விடம் வந்துசேர்ந்தார்கள். தன் புருஷன் போய் வெகு நேரமாகியும் வராமலிருக்கவே என்னவோ ஏதோ என்று சந்திரமுகி மனங்கலங்கி அவரைப் பார்த்து அழைத்துவர ஆவல்கொண்டவளாயிருந்தபடியால் பயமென்பதே தெரியாமல் செல்லத்தோடுகூட அவ்விடம் வந்துசேர்ந்தாள். அவ்விடம் தன் பிராணநாதன் கையை மற்றொருத்தி பற்றிககொண்டிருக்கக் காணவே, அவளுக்கு மிகக் கோபம் உண்டாயிற்று. இரண்டு ராஜகுமாரத்திகளும் என் புருஷன், உன் புருஷன் என்று வாதிக்க ஆரம்பித்தார்கள். இம்மாதிரி வாதத்திலேயே பொழுதுவிடிந்து விட்டது. தோப்பில் இவர்கள் இபபடி வாதிபபது பெரியராஜா காதுக்கு எட்டி, அவன் அவ்விடம் ஓடிவந்து ஸங்கதியையெல்லாம் அறிந்துகொண்டவனாய், செய்வது இன்னதென்று தோன்றாமல் சற்றுநேரம் ஆலோசித்து, கடைசியாய இப்படி வாதிபபதில் பலன் ஒன்றும் காணோம்; நீங்கள இருவரும் இவரைப் புருஷனாக வரித்து அக்காள் தங்கைகள்போல வாழவேண்டுமென்று சொல்லி எல்லோரையும் அழைத்துக்கொண்டு அரண்மனை போய்ச் சேர்ந்தான் தெய்வயத்தினமாய் யுவராஜாவுக்குத் தன் அருமைமகளைக் கொடுக்கும்படி வந்ததில், பெரியராஜாவுக்கு உண்டான ஸந்தோஷத்துக்கு அளவே இல்லை. உடனே ஒரு நல்ல முகூர்த்தம் பார்த்து அன்று தன் மகளுக்குக் கலியாணமென்று அரசர்களுக்கெல்லாம் மணவோலை எழுதிவிட்டான். மண்டலேச்சுவரருக்கும் கிருஷ்ணசிங்கு கலியாணத்துக்கு வரும்படியும் சந்திரமுகிக்கும் அன்று கலியாணமென்பதையும் தெரிவித்தான். அவர் அந்தப் பத்திரிகையைக் கண்டவுடன் அதிக ஸந்தோஷப்பட்டுத் தன் மகளைப் புஷ்பபுரத்தில் அவ்விடத்து அரசனுக்குக் கலியாணம் செய்துகொடுப்பதாக எல்லோருக்கும் தெரிவித்து, எல்லாருடனும் புறப்பட்டு அளவற்ற ஆடை ஆபரணங்களுடனும் திரவியத்துடனும் ராஜ பரிவாரங்களோடுகூடக கலியாணத்துக்கு ஒருமாதம் முன்னாடியே வந்து சேர்ந்தார். யுவராஜாவான கிருஷ்ணசிங்கு நடந்த ஸங்கதிகளையெல்லாம்

அவருக்குமட்டும் தெரிவித்து அவர் மனதைக களிபபித்தான். மண்டலேச்சுவரரும் இவ்வளவு வல்லமையும் புததியுமுள்ள ஒருவனைத் தான் மருமகனுகப பெற்றதற்கு அதிக ஸநதோஷமடைந்தார். மற்றுமநேக அரசர்கள் தஙகள் தஙகள் பரிவாரங்களுடன் வந்தார்கள். மணடலேச்சுவரர் மகளுக்குக் கலியாணமாகையால் ஐமபத்தாறுதேசததிலிருந்தும் அரசர்கள் எல்லோரும் வந்து கலியாண மஹோற்சவததைச் சிறபபித்தார்கள். அவர்கள் கிருஷ்ணசிங்காகிய புஷ்பபுரம் யுவராஜாவையும் சந்திரமுகி இந்துகலைகளையும் ஆசீர்வதித்து, தம்பதிகளுக்குவேணடிய ஸம்மானங்களசெய்து அவர்கள்செய்த ப்ரதிஸம்மானஙகளைப பெற்றுக்கொண்டு தங்கள் தஙகள் ஊர்போய்ச் சேர்நதார்கள். மண்டலேச்சுவரர்மட்டும் அங்கேயே சில நாளிருநதார்.

தனசிங்கு என்னவானுன்? முதலில் புஷ்பபுரத்தை விட்டு ஓடும்பொழுது கிருஷ்ணசிங்கு காளிகோவில் மதிட்பிளையில் ஒளித்த செருபபுகள் என்னவாயின? இவைகளைபபற்றிக் கடைசியாய்ச் சிறிது சொல்லுவோம். கிருஷ்ணசிஙகு மறுபடி புஷ்பபுரம் வந்துசேர்ந்தவுடன் தன்னைப பெற்றோர்கள் என்னவானுர்களென்று விசாரிக்காமலிருக்கவில்லை. வந்தவுடன் விசாரித்து அவர்கள் அதிகமாய்ச் செலவுசெய்து வறுமையை விலைக்குவாங்கி வீடுமுதலான ஆஸ்திகளை விற்றுவிட்டு ஸாதாரண ஜனங்களுக்கும் கீழோராய் இருப்பதாகக் கேள்விப்பட்டு மனவருத்தமுற்று, நாம் அவர்களை இப்பொழுது பார்ப்பது சரியல்ல, காரியங்கள் கைகூடினபிறகு பார்ப்போம் என்று இருந்துவிட்டான். எல்லாம் நினைத்தபடி முடிந்தவுடன் கிருஷ்ணசிங்கு ஒருநாள் தன் தகப்பனு தாயார் தமையன்மார்கள் இருக்குமிடத்திற்கு ஆட்களை அனுப்பி அவர்களை உடனே அழைத்துவரக் கட்டளையிட்டு, காளிகோவிலுக்கு ஒரு பல்லக்கனுப்பி அதில் அங்கிருக்கும் செருப்புகளை எடுத்துவரக் கட்டளையிட்டான்.

தனசிங்கு தன்னைக் குடும்பத்துடன் அரசனழைபபதாய்க் கேள்விப்பட்டு, தனக்கு வரபபோகிற பாக்யம் இன்னதென்று தெரியாமல் ஒருகால் நாம் என்ன ராஜாபராதம் செய்தோமோ, என்னதண்டனை நமக்கு ஆகப்போகிறதோ என்று நடுங்கிக்கொண்டே அரண்மனைவந்து சேர்ந்தான். இவர்களைக் கண்டவுடன் கிருஷ்ணசிங்குக்கு அடக்கக்கூடாத துக்கம் வந்துவிட்டது. அதை ஒருவருககும் காட்டிக்கொள்ளாமல் அடக்கிக்கொண்டு சீககிரம் அவர்களை அரண்மனைக்குள் அழைத்துப்போய் ஸ்நானஞ்செய்வித்து நல்ல ஆடை ஆபரணங்களால் அலங்காரம் செய்வித்து அழைத்துக்கொண்டுவரக் கட்டளையிட்டான். யுவராஜாவாகிய கிருஷ்ணசிங்குக் குமட்டில் அவர்கள் இன்னுரென்று தெரிந்ததேயல்லாமல் இவ்வளவு செய்பவன் தங்கள் அருமைமகனென்று அவர்களுக்குத் தெரியவேயில்லை. கடைசியாய் ஸ்நானஞ்செய்து அலங்காரம் பண்ணிக்கொணடு தனசிங்கு, கமலாபாய், ராமசிங்கு, லக்ஷ்மணசிங்கு நான்குபேரும் வந்துசேர்ந்தார்கள். அவர்கள் முன்னிலும், புஷ்பபுரம் பெரியராஜா, மண்டலேச்சுவரன் இவர்கள் முன்னும் தான் பிறந்துவளர்ந்ததுமுதல், அதுவரையில் நடந்த ஸங்கதிகளையெல்லாம் சொல்லி, பல்லக்கில் வந்திருந்த செருப்புகளைக் காட்டி, கடைசியாய் எல்லாம் இந்தச் செருப்பின் பாக்யம்; என் தகப்பனுர் என்னை இந்தச் செருப்பாலடித்திராவிட்டால் இப்படி முடிந்திருக்கமாட்டாதென்று தெரிவித்தான். பெற்றோர்களும் தமயன்மாரும் தங்கள் கிருஷ்ணசிங்கைக் கண்டு

ஆநந்தபாஷ்பம் பொழிந்தார்கள். கிருஷ்ணசிங்கும் அன்றுமுதல் அவர்களை அரண்மனையிலேயே வைத்துக்கொண்டு "தந்தை தாய்பபேண்" என்னும் பழமொழிப்படி தன் கடமையை நடத்திவந்தான்.

கிருஷ்ணசிங்கு ஒரு பெரிய மண்டலேச்சுவரனும் புஷ்பபுரம் ராஜாவாயும் வெகுகாலம் இருந்தான். அவனுக்கு அநேகம் பிள்ளைகள் பிறநதன. புஷ்பபுரம் பெரியராஜாவும் தாராபுரம் மண்டலேச்சுவரனும் தௌஹித்ரர்களைக் கண்டு தங்களுக்குப பிள்ளையில்லாத குறைவை மறந்தார்கள்.

அனாதனையோடு ஊரைவிட்டு ஓடிபபோன கிருஷ்ணசிங்கு தன்னுடைய மதியினாலும் முயற்சியாலும் மண்டலேச்சுவரனகித் திரும்பிவந்தான் பார்த்தீர்களா?

> "முயறசி திருவினை யாக்கு முயற்றின்மை
> யின்மை புகுத்தி விடும்."

> "மெய்வருத்தம பாரார பசிநோககார் கண்டுஞசார
> எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
> அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
> கருமமே கண்ணாயி னார்."

ஜாதிக்காய்.

ஜாதிக்காயென்பது நெடுந்தூர தேசததினின்றும் ஏற்றுமதியாகி வருகின்ற ஓர்வகை வர்த்தகச்சரக்கென்று இத்தேசததாரைப் போலவே ஐரோப்பியர்களுக்கும் வெகுநாள் முன்னமே தெரியும். ஆனாலும் அதைப்பற்றிய வரலாறு ஒன்றும் நெடுநாள்வரையில் தெரியாமலேயிருந்தது. அது எந்தத்தேசத்தில் உற்பத்தியாகிறதோ அதுவும் தெரியாது; அது விளைவது மரமோ, கொடியோ, செடியோ அதுவும் தெரியாது; நெல்லு காய்ச்ச மரத்தின் கதையாய் இருந்தது. வெனிஸ்வர்த்தகர்கள் மிகப பிரசித்தராயிருநதகாலத்தில் அவர்கள் கப்பலேறி நெடுந்தூரம் யாத்திரைசெய்து கீழ்த் தேசங்களினின்றும் ஜாதிககாய் முதலிய வாதனைப்பொருள்களைக் கொண்டுபோய்ப் பலவிடங்களிலும் அதிக லாபமான விலைக்கு விற்கலானார்கள்.

ஜாதிககாய் இயற்கையாய்ப் பயிராகுமிடம் கிழக்குச் சமுத்திரத்திலுள்ள, வாசனைத்தீவுகள் என்று வழங்கும், திட்டுகளாம். அததீவுகளுள் மிகப் பெரியது 30 மயிலுக்கு அதிக நீளமில்லை. அப்படியிருக்க அந்த வர்த்தகத்தில் வெனிஸ்தேசததாருடைய சாய்கால் கொஞ்சங்கொஞ்சமாய்க் குறையலாயிற்று. அந்தத் தீவுகளிலும் பல மாறுபாடுகள் உண்டாயின. அப்படியே வர்த்தகததிலும் விததியாசங்கள நேரிட்டன. நாளளவிலே வெனிஸ்தேசததின் சாய்கால் அடங்கிப்போக, அதன் வாத்தகமும் அப்படியே தலைசாய்ந்துபோயிற்று. வாசனைத்தீவுகளெல்லாம் பேர்ச்சுகல்தேசத்தார்க்குச் சுவாதீனமா

யின. அதன்மூலமாய் அவர்கள் மிகுந்த செல்வமும் சாய்காலும சம்பாதித்துக்கொள்ளலானார்கள்.

அககாலததிலே நியூகினியென்னும் தீவினின்றும், அதையடுத்த சில தீவுகளினின்றும் போர்சசுகல் தேசததார் ஜாதிககாய் சம்பாதிததுக்கொண்டு போனார்கள். அங்கே ஜாதிககாய் மரங்களை ஒருவரும் வருந்திப் பயிரிடவேண்டுவதில்லை; அவைகள் காடுகளில் தாமாகவே முளைததுப் பயிராகிக்கொண்டிருந்தன. ஆனாலும் வாததகர்கள் அதிக விலைகொடுத்து அவற்றை வாங்கி ஐரோப்பாவுக்குக கொண்டு போய் விற்றுக்கொண்டிருந்தார்கள.

போர்ச்சுகல் தேசத்தாரும் அந்தப் பெருமையை நெடுநாள் அனுபவித்துவரவில்லை. அக்காலத்திலே உலாந்தக்காரர் தலையெடுக்க ஆரமபித்து இந்துமகாசமுத்திரத்தையெல்லாம தங்கள் சுவாதீனம் செய்துகொள்ளலானார்கள். கால்வளவிலே வாசனைததீவுகளெல்லாம் அவர்கள் கைவசமாய்ப்போயின. இது நடந்து 20 வருஷத்திற்கெல்லாம் இலங்கைத்தீவும் உலாந்தக்காரருக்குச் சுவாதீனமாயிற்று.

இப்படியிருக்குங்காலத்திலே வாசனைத்திரவிய வர்த்தகம் மற்றொருவகையில் மாறுபடத்தொடங்கியது. உலாந்தக்காரர் வாசனைத்திரவிய வாததகம முழுமையும பிறருடைய சமபந்தமில்லாமல் தாங்களே கைக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்து அதற்காக அந்தச் சரக்கு விசேஷமாய் விளைவதைத தடுக்கவேண்டுமென நிச்சயித்தார்கள். அப்படிச் செய்தால் சரக்குக்குக் கேள்வியு மதிகம்பிறக்கும், விலையுமதிகமாயேறும என்பது அவாகள் கொண்ட கருத்து. அதன் பொருட்டு அவர்கள் செய்த உபாயம் என்னவெனில், காட்டிலுள்ள ஜாதிக்காய் மரங்களையெல்லாம் வெட்டி நிர்மூலமாக்கத தொடங்கினாகள். நிர்மூலமாக்கியபிறகு பழையபடி அந்த மரம் எங்கும் காடுகளில் தானாய் முளைக்கக்கூடாதென்றும், அவற்றுள் ஒன்றன பாந்தா தீவிலேயே அதைப பயிரிட்டு வளர்க்கவேண்டுமென்றும் ஏற்பாடுசெய்தனர். இவர்கள் எவ்வளவு திராலோசனை செய்தாலும் அம்மரங்களமாத்திரம் காடுகளில தப்பித்தவறி முளைத்துக்கொண்டேயிருந்தன. அதுகாரணமாகப் புலமும் விசேஷமாய்ப் பலிக்கலாயிற்று. இதன்மேல் அவர்கள் செய்யவேண்டிய உபாயமென்ன? தானாய்ப் பழுத்துதிர்ந்த பழங்களையெல்லாம் பொறுக்கிக் கும்பலாய்ச்சேர்த்து நெருப்பில் கொட்டி யெரித்துவிட்டார்கள்; கடலிலும் அநேகமாய் வாரிக் கொட்டினார்கள்.

முற்காலததில ஜாதிககாய் இவ்விதமான தசையிலிருந்ததானாலும் இப்பொழுது அப்படியில்லை. வாசனைததிரவிய வாத்தகம யாவர்க்கும் பொதுவாயிருக்கின்றது. ஜாதிக்காய்ச்செடி இப்பூகோளத்தில் பலவிடங்களிலே பயிராக்கப்பட்டிருக்கின்றது. சுமத்ராதீவிலே இப்போ ஜாதிக்காய் மரங்கள் விசேஷமாக வளர்ந்திருக்கின்றன. இந்தி

யாவிலும் பலவிடங்களில் பயிராக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் அம்மரங்கள் ஆதியில் வளர்ந்த பாந்தா என்னும் தீவுமாத்திரம இவ்வுலகத்தில் மிகச்சிறந்ததான ஒரு சிங்காரவனம்போலவேயிருக்கின்றது. அது மிகவும் அழகான இடம்; அங்கே மூன்றுதீவுகள் ஒன்றாய்ச்சேர்ந்து அவ்விடத்தில் மிகச் சிறந்த கப்பல் ரக்ஷணஸ்தானம் ஒன்று அமைந்திருக்கின்றது. அந்த ஸ்தானத்திலே தண்ணீர்க்குள் பல ஜந்துகளுக்குக்கீழேயிருக்கின்ற பவழங்களும பின்னும் பலவிதமான நுண்ணியபொருள்களும் கண்ணுக்கு நன்றாய்ப் புலப்படும்படி தண்ணீர் அவ்வளவு அசைவற்றுத் தெளிவாயிருக்கின்றது. அந்தத் தீவுகளெல்லாம் பல எரிமலைகளுள்ளனவாய் இருக்கின்றன. ஆனாலும் அவற்றுள் இரண்டில் விருக்ஷவகைகள் விசேஷமாய்ச் செழித்துவளர்ந்திருக்கின்றன. அவைகளில ஜாதிக்காய் மரத்தோப்புகள் விசேஷமாய் வைத்துப் பயிராக்கப்பட்டிருக்கின்றன. அந்த பூசாரம் அதற்கு மிகவும் ஏற்றதாயிருப்பதுமாத்திரமேயன்றி அங்கே மாதமதோறும் மழைபெய்துவருவதால் அமமரங்களை எப்போதும் ஈரம்காத்துக்கொண்டேயிருக்கின்றது. ஜாதிக்காய்ச் செடிகளுக்குப் பண்படுத்திப் பாடுபடவேண்டியதில்லை; செடிகளை நட்டுவிட்டால தானே வளர்ந்து பயிராகி மாறிமாறிப் பூப்பதும், காய்பபதுமாயே இருக்கும்.

ஜாதிக்காய் நன்றாய் முற்றினால பெரிய கொய்யாபபழத்தளவு பருமனுள்ளதாயிருக்கும். அதன்மேலே அரையங்குலம் பருமனுள்ளதான தோல் இருக்கும். அதை உரித்தால் அதற்குள் கன்னங்கறேலென்று கறுத்த ஓடு மூடிய கொட்டை காணப்படும். அந்தக்கொட்டையின்மேல செக்கச்சிவேலென்று ஜாதிபத்திரி மூடிக்கொண்டிருக்கும். அந்த ஜாதிபத்திரியைக கொட்டையினின்றும் பிச்சியெடுத்து நிழலிலேயே உலர்த்திப் பைகளில் போட்டுக்கட்டி வர்த்தகத்திற்கு வெளிகளில் அனுப்புவார்கள். ஜாதிபத்திரியால் மூடப்பட்ட கறுப்பு ஓடு யாதென்று கேட்பீர்களே; அதுதான் நாம் சிறந்த வாசனைத்திரவியமாக உபயோகிக்கிற ஜாதிக்காய்ப் பருப்பின் மேலோடு. அந்த ஓடு மிகவும் உறுதியானது; உள்ளேயிருக்கிற பருப்போடு அழுந்தமாய்க் கடித்துக்கொண்டிருக்கிறதாகையால் அதை உடைத்தால் கூடவே அதற்குள்ளிருக்கிற பருப்பும் உடைந்துபோகும். அதற்காகச் செய்கிற உபாயம் என்னவென்றால், அந்த ஓட்டோடே அதை வெயிலில் உலரப்போட்டு அதற்குள்ளிருக்கிற பருப்பு நன்றாய்ச் சுருங்கி ஆடும்படிசெய்து சுலபமாய் மேலோட்டையுடைத்து எடுக்கும்படியாக்குகிறார்கள். பிறகு அந்தக் கொட்டைகளைக் கடல்தண்ணீரிலும் சுண்ணாம்பிலும் ஊறப்போட்டு மறுபடியும் கும்பலாய் வெயிலில் கொட்டிக் கொஞ்சநஞ்சம மிகுந்திருக்கிற ஈரமும் போய்விடும்படி செய்கிறார்கள். அதனால் அந்தக் கொட்டைக்கு மறுபடியும் முளைக்கும்படியான தன்மை போய்விடுகின்றது.

பிறகு அந்த ஜாதிக்காய்களை உலர்ந்த சுண்ணாம்போடு சேர்த்துச் சிப்பங்களாகக் கட்டி ஐரோப்பாமுதலிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். ஜாதிக்காய்களில் இரண்டுவகை உண்டு. அவற்றுள் ஒன்று மிகவும் பெரியது. அந்தக் கொட்டையைக்காட்டிலும் அதன்மேல் மூடிக்கொண்டிருக்கிற ஜாதிபத்திரி மிகவும் நீளமாயிருக்கும். மற்றொன்றிலே ஜாதிபத்திரி கொட்டையில் பாதிநீளம்தான் இருக்கும். ஜாதிக்காயின் தைலம் மஞ்சள்நிறமானது; நல்ல வாசனையையும் உடைத்தானது. ஒரு ராத்தல் ஜாதிக்காயைப் பிழிந்தால் மூன்று ஔன்ஸ் தைலம் காணும். ஜாதிக்காயின் மேல் தோல் முதலிய குப்பைகூட வீணாய்ப் போவதில்லை. அதை எங்கேயாவது ஓரிடத்தில் குப்பலாய்க் கொட்டி மக்கவைத்தால் அதைச் சுற்றிலும் ஒருவகைக் கறுப்பான காளான் அபரிமிதமாக முளைக்கின்றது. அத்தேசத்தார் அதை வெகு இன்பமாய்த் தின்கிறார்கள். ஜாதிக்காய்ப் பருப்பு எப்படியோ அப்படியேதான் அதன் ஓட்டின்மேல் ஒட்டிக்கொண்டிருக்கிற ஜாதிபத்திரியும் சிறந்த பரிமளமுள்ளதாயிருக்கின்றது.

கருமாரப்பிள்ளையும் கின்னரவாத்தியமும்.

பதினேழாவது நூற்றாண்டின் கடைசியில் இங்கிலாந்திலே ரிச்சார்டு பாலி என்று ஒருவன் இருந்தான். அவனுடைய தகப்பன் மிகவும் எளியவனாய்ச் சிறிது பூமி வைத்துக்கொண்டு அதைத் திருத்திப் பயிர்செய்து கஷ்டப்பட்டு ஜீவனஞ்செய்துவந்தான். ஆதலின் மகனாயினும் ஏதாவது ஒரு கைத்தொழில் கற்றுச் சுகமாக வாழட்டுமென்று அவன் இருப்பாணிகள் செய்யும் ஒரு தொழிலாளியினிடம் தன் மகனை வேலை கற்றுக்கொள்ளும்படி விட்டுவைத்தான். அச்சிறுவன் நல்ல புத்திசாலி; மிகவும் உழைப்பாளி; தன் எஜமானனிடத்தில் கிரமமாகவே அடங்கி யொடுங்கி உடம்பு வணங்கி இரண்டொரு வருஷகாலம் அவனிட்ட வேலைகளைத் தவறாமல் செய்துகொண்டுவந்தான். இப்படியிருக்க நாளளவிலே அந்த வர்த்தகம் விருத்தியடையாமல் வரவர க்ஷீணிக்கலாயிற்று. அதனால் அந்தத் தொழிற்சாலையில் வேலை கற்றுக்கொள்ளும் சிறுவர்களுக்காயினும், நன்றாய்ப் பழகிக் கைதேர்ந்த பெரியோர்களுக்காயினும் ஒருவர்க்கும் வேலைகிடைக்காமற் போய்விட்டது.

ரிச்சார்டு என்பவனுக்குச் சங்கீதத்தில் விருப்பம் அதிகம், ஒழிவுவேளைகளில் கின்னரவாத்தியமும் கையுமாய்ப் பாடிக்கொண்டிருப்பான். இப்போது தொழிற்சாலையில் வேலையும் இல்லாமற் போகவே எப்போதும் கையில் வாத்தியத்தை எடுத்துக்கொண்டு

தன்னுடைய கிராமத்தில் மாத்திரமேயல்லாமல் அக்கம்பக்கங்களி லுள்ள கிராமங்களுக்கும் போய் விநோதமாக வாசிப்பான். யார் யார்க்கு எந்தெந்தவிதமாக வாசிக்கவேண்டுமோ அந்தந்தவிதமாக வாசிதது எல்லோரையும் சுவாதீனம் செய்யும்படியான திறமை அவ னிடத்தில் அதிகமாயுண்டு. வியாதியில அடிபட்டு வருந்திப் பொழுதுபோகாமல் தவிப்பவர்களிடத்திலேயே அதிகநேரம் உட்காந்திருந்து அவர்களைப் பாட்டு முதலியவைகளால் உற்சாகப் படுத்துவதில் அவன் மிகுந்த விருப்பமுள்ளவன். ஆதலின் அவன் எங்கேபோனாலும் எல்லோரும் அவனை அன்புடன் வரவழைத்து அவனுக்கு வேண்டிய உபசாரங்கள் செய்யத்தொடங்கினார்கள்.

இவ்வண்ணமே சிலநாள் கழிந்தன. இவன் என்னவோ தநதனப பாட்டுப் பாடிக்கொண்டு திரிகிறானே; தான் முன்செய்துவந்த வேலைகளையெல்லாம் மறந்துவிட்டானோ என்பீர்களோ? இல்லை; அந்த நினைப்பு எப்போதும் அவன் மனதினுள் இருந்துகொண்டேயிருந் தது. வரவர வர்த்தகம் ஈனஸ்திதிக்கு வந்ததுகண்டு எஜமானுககு அதில் நிராசைபிறந்துவிட்டதானாலும், இசசிறுவனுக்குமாத்திரம் நிராசைபிறக்கவில்லை. ஒருநாள் எஙகேயோ போய்விட்டு ரிச்சார்டு கின்னரமும் கையுமாய்த் திரும்பி வரும்போது, வழியிலே முன் தானிருந்த தொழிற்சாலையில் பெரிய வேலைக்காரனாயிருந்த ஒருவன் எதிரே வரக்கண்டான். கண்டவுடனே அவனுடன் ஏதோ பேச விருப்பங்கொண்டவனாகி அங்கேயே நிலையாய்நின்று அடியில் வருமாறு பல கேள்விகள் கேட்கலானான். அந்த வேலைக்காரனும் இச்சிறுவனிடததில மிக்க நேசங்கொண்டவனாகையால் அவன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் உசிதமான ஸ்மாதானம் சொல்லிக் கொண்டேவந்தான். அவை யாவையென்பீர்களோ கேளுங்கள்:—

ரிச்சார்டு: இத்தேசத்தில் ஆணிவர்த்தகம் இப்படி ஈனஸ்திதிக்கு வந்ததற்குக் காரணமென்ன ஐயா?

எஜமானன்: ஸ்வீடன் தேசத்திலே ஆணிகள் வெகு நயமாயும் சுலபமாயும் செய்யவேண்டிய வழிகளைக கண்டுபிடித்திருக்கிறார் கள். பெரிய இருமபுக்கம்பிகளை ஆணிகளுக்கேற்றபடி சிறிது சிறிதாக வெட்ட யந்திரங்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவ்வே லைகளையெல்லாம் நாம கையினாலேதானே செய்து தீரவேண்டும்; ஆதலின் அவர்கள் நம்மைவிட வெகு விரைவில் அநேகம் ஆயிரம் ஆணிகள்செய்து சுலபமான விலைக்கு விற்றுபோடுகிறாகள். நமது கைவேலை மெதுவிலே முடிகிறதாகையால் அவர்களைப்போல அப்படிச் சொற்பவிலைக்கு விற்க நமக்குச சாத்தியப்படவில்லை. இதுதான் காரணம்.

ரிச்சார்டு: அப்படியானால் நாமும் அவர்களைப்போல ஏன் ஒரு யந்திரம் செய்துகொள்ளக்கூடாது; இதற்காக நாம் வர்த்தகத்தைக் கைவிடலாமா?

எஜ. கூடுமானால் நாமும் ஒருயந்திரம் அவசியம் செய்துகொள்ள வேண்டுவதுதான். அந்த யந்திரத்தின் சொரூபம் இப்படிப்பட்டதென்று இங்கே ஒருவர்க்கும் தெரியவில்லையே. ஸ்வீடன் தேசமோ சமீபத்திலில்லை, வெகுதூரம். யாராவது ஒருவன் கஷ்ட நஷ்டங்களுக்கு உடன்பட்டு ஒருவேளை அத்தேசத்திற்குப் போவதாய் ஒப்புக்கொண்டாலும், அங்குள்ளார் அந்த யந்திரத்தைப் பார்க்க இடங்கொடுப்பதில்லை. அப்படியே அநேகர் நெடுந்தூரம் யாத்திரைசெய்து அத்தேசம் போனார்கள். போய்ப் பயனென்ன? அங்குள்ள யந்திர சாலைக்குள் ஒருவரும் போய்ப் பார்க்கக்கூடாதென்று மறுத்துவிட்டார்கள். அவர்கள் தாம் கண்டுபிடித்த நுட்பத்தை அவ்வளவு இரகசியமாய் வைத்துக்கொண்டிருக்கிறார்களே, நாம் என்னசெய்கிறது என்றான்.

அதைக் கேட்டபிறகு ரிச்சார்டு அதன்மேல் ஒன்றும் கேட்கவில்லை. நல்லதென்று அவனிடம் விடைபெற்றுக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்து அன்றுமுதல் வேறுயோசனையில்லாமல் அதே சிந்தையாயிருந்தான். இப்படியிருக்கையில் ஒருநாள் அவன் எங்கேயோ போய்விட்டான். ஒருநாளாயிற்று, ஒருவாரமாயிற்று, ஒரு பக்ஷமாயிற்று, ஒருமாதமாயிற்று. எத்தனைநாளாகியும் அவன் வீடு வந்து சேரவில்லை. அண்டையயல் ஊர்களெல்லாம் போய் விசாரித்தார்கள். எங்கே விசாரித்தாலும் அவனைப்பற்றி யாதொரு செய்தியும் தெரியவில்லை; என்னவானானோ, எந்தவழிபோனானோவென்று யாவரும் அலைந்து தவித்துக்கொண்டிருந்தனர். இப்படியிருக்க கடைசியில் அநேகமாதங்கள் கழிந்து ஒருநாள் அவனே திரும்பி ஊருக்குவந்து தான் செய்த செய்கைகளையெல்லாம் சொல்லி அங்குள்ளவர்களெல்லாம் மிகவும் அதிசயிக்கும்படி செய்தான்.

அவ்வளவுகாலம் அவன் எங்கேபோயிருந்தான் என்பீர்களோ? அன்று எஜமானன் சொன்ன பேச்சைக் கேட்டவுடனே இரும்பு யந்திரத்தை எப்படியாயினும் தெரிந்துகொண்டுவரவேண்டுமென்று மிகுந்த ஆவல்கொண்டவனாய் ஒருவருடனும் சொல்லாமல் தன் வாத்தியத்தையே தனக்குத் துணையாகக்கொண்டு ஸ்வீடன்தேசத்துக்குப் போய்விட்டான். போனசெய்தி அவன் ஒருவன்தவிர மற்றெவர்க்கும் தெரியாது. போய்த் திரும்பிவந்தபின்புதான் அவன், ஸ்வீடன்தேசத்து ராஜதானியாகிய ஸ்தாகோம் நகரத்துக்கு தான் போய்ச் சேர்ந்ததும், அந்த நகரத்தாரையெல்லாம் தன் வாத்தியத்தினாலேயே வசப்படுத்திக்கொண்டதும், அவ்வண்ணமே தான் கருதிய இரும்புயந்திரங்கள் வேலைசெய்யும் தொழிற்சாலைக்கும் போய் அங்குள்ளவர்களை வசப்படுத்திக்கொண்டு அதற்குள் தனக்கு இஷ்டமானபடி சஞ்சரிக்க அனுமதிபெற்றதும், அதனுள் வேலை செய்யும் தொழிலாளிகளெல்லாரும் தன்னுடன் சிநேகம்பாராட்டி-

அந்த யந்திரசாலைக்குள், சிலவேளையில் யந்திரத்தின் பக்கத்திலேகூட, உட்கார்ந்து போஜனஞ்செய்யும்போது அண்டையில் உட்கார்ந்து தன்னை வீணைவாசிக்கும்படி செய்ததும், அதுதான் தனக்கு நல்லதருணமென்று அசசமயங்களில் தான் அந்த யந்திரத்தின்மேலேயே கண்வைதது அதன் நுட்பங்களையெல்லாம் நன்றாய்த தெரிந்துகொண்டதும், அப்படியே விடாமல் பலநாள் பார்த்து அதைப்பற்றிய எல்லாவிஷயங்களையும் நன்றாய் மனதில் பதிய வைத்துக்கொண்டு போனபடியே திரும்பி, கபபலில ஒரு சிறுவேலைக்காரனாய் அமர்ந்து வாடகையில்லாமலே கப்பலேறிக் கடலைக் கடந்து தரைவழியெல்லாம் காலால் நடந்துவந்து மறுபடி இங்கிலாந்து சேர்ந்ததுமாகிய தன் கதைகளையெல்லாம் எடுத்துக்கூறினான்.

இவற்றையெல்லாம் கேட்டு அவ்வூரிலுள்ளவர்கள் எல்லாரும் மிகவும் ஆச்சரியப்பட்டு அவனுடைய சாமர்த்தியததைப் பார்த்து மிகவும் மெச்சிக்கொண்டாரகள். பிறகு ரிச்சார்டு சொல்லியபடியே இரும்புவேலைக்கு ஏற்ற யந்திரம் ஒன்று செய்துமுடிக்கப்பட்டது. அந்த யந்திரம் பார்வைக்கு வெகு விசிததிரமாயிருந்தது. யாவரும் அதைக் கண்டு வியந்தார்கள். ஐயோ! இவ்வளவு வருத்தப்பட்டுப் பார்த்துவந்து செய்தும் கடைசியில் அந்த யந்திரம் காரியகாரியாகவில்லை. அது பார்வைக்குமட்டும் அத்தனை அழகாயிருந்ததேயொழிய வேலைக்கு உதவவில்லை; எவ்வளவு வருததப்பட்டுப்பார்த்தும் அதை உபயோகபபடுத்த ஒருவராலும் ஆகவில்லை. அதைக் காணவே ரிச்சார்டுக்கு வெகு வெட்கமாய்ப்போயிற்று. பார்த்தவர்களெல்லாம் அவனைப் பரிகாசம்பண்ண ஆரம்பித்தார்கள். அதற்கு இன்னபரிகாரம் செய்கிறதென்று தோன்றாமல் ரிச்சார்டு, எப்படியாவது நாம் இவர்கள் முகத்தில் விழியாமல் இவ்வூரைவிட்டு ஓடிப்போனாற் போதுமென்று, ஒருவர்க்கும் தெரியாமல் மறுபடி ஒருநாள் ஓடிப்போய்விட்டான். அதுகண்டு அவ்வூரரெல்லாம், அந்தமட்டும் அவனுடைய கொழுப்பு அடங்கிற்று; இனி அவன் இந்த முகம் திரும்பமாட்டான் என்று எபபோதும் கைகொட்டி நகைத்துக்கொண்டிருந்தார்கள்.

ஆயினும் அவர்கள் நினைத்தபடி அவன் மறுபடி அவ்வூருக்குத் திரும்பிவராமற்போகவில்லை. சிலமாதங்கள் கழிந்தபிறகு முன்போலவே அவன் திரும்பி ஊர்வந்து சேர்ந்து முன்சொன்ன கதைகளைப்பார்க்கிலும் புதுமையான கதைகள் சொல்ல ஆரம்பித்தான். மறுபடியும் முன்போலவே அவன் ஸ்வீடன்தேசத்துக்குப் போயிருந்தானும். அங்குள்ள இரும்புவேலைக்காராகளெல்லாம் தாங்கள் நெடுநாளாய்ப் பாராதிருந்த தங்கள் நேசன் மறுபடி வரக்கண்டு காணாதது கண்டதுபோல உடமபுபூரித்து, தங்களை விட்டுப் பிரியாதிருக்கும்படி எப்போதும் அவனைத் தங்களோடுகூடவே வைத்துக் கொண்டிருந்தார்கள். அத்தருணங்களில் ரிச்சார்டு அங்குள்ள

யந்திரத்தண்டை போய் நின்று அதை நன்முக உற்றுப்பார்த்து, தன் யந்திரத்திலுள்ள குறைவு இன்னதென்பதைக் கண்டுகொண்டு சீக்கிரமே தன்னூருக்குத் திரும்பினுன்.

ஊர்வந்து சேர்ந்தவுடனே, உபயோகமற்றதென்று மூலையில் எறிந்துகிடந்த யந்திரத்தையெடுத்து ரிச்சாாடு செம்மைப்படுத்தி, அதிலுள்ள குறைபாட்டை நீக்கி வேலைக்கு உபயோகமாகும்படி செய்துவிட்டான். யந்திரம் வெகு விநோதமாய்ச சுழல ஆரம் பித்தது. அதைக் காணவே இரும்புவேலைக்காரர்களுக்கெல்லாம் அளவற்ற சந்தோஷமுண்டாயிற்று. பிறகு அவர்களுடைய வர்த் தகம் தலையெடுதது வரவர மேலோங்கலாயிற்று. ரிசசாாடும் பெரும் புகழும்பெற்றுச் செழித்தோங்கலானுன்.

பின்பு சிலவருஷங்களுக்குள் அவன் மிகத் தேர்ச்சிபெற்றவ ஞகி அவ்விடத்திலுளள இரும்புசாமானசெய்யும் தொழிற்சாலைத் தலைவர்களுள் ஒருவனுகி, தன் வாழ்நாளில் மிகுந்த பொருளசேகரித் ததுமல்லாமல் அவ்விடம் எங்கும் வியாபாரங்கள் பலவகையி லும விசேஷமாக விருத்தியடையும்படியாகவும் செய்தான்.

பரிசுத்தமான காற்றைப்பற்றி

(ஒரு சம்பாஷணை)

நம்முடைய கிராமத்திலுள்ள பாடசாலையில் உவாத்தியாயிருக் கின்ற தாயாரம்மாளைப்பற்றி வெகுவாய் அனைவரும் கேள்விப் பட்டிருக்கலாம். எனக்குத் தெரிந்தமட்டில் அவள் மிகவும் உத தமமான பெண். அவள் செய்யும் வேலைகளைக் கண்ணுல் பாாத் தாலும், அவள் பேசும் பேச்சுக்களைக் காதினுல் கேட்டாலும் எல் லோருக்கும் நல்ல நடத்தை படியும். அவள் அதிகாலையில் எழுந்து வேலைசெய்யததொடங்கி இராததிரி நெடுநேரமளவும் வேலைசெய்த வண்ணமாயிருப்பாள். வேலைசெய்வதென்றுல் நிமிஷமாகிலும் வீணுன வேலையொன்றும் செய்வதில்லை; எபபோதும் பலபேர்க் கும் உபயோகமான காரியங்களையே செய்துவருவாள். பகற் பொழுதெல்லாம் அவள் பள்ளிக்கூடததிலுள்ள ஐம்பதுபிள்ளை களோடு போராடுவதற்கே சரியாயிருக்கும் என்று சிலர் ஒரு வேளை நினைக்கலாம். 'கொககுக்கு ஒன்றே மதி' என்பதுபோல அவள் அப்படி இருப்பவளன்று; பள்ளிககூடத்தில் சிறிது அவ காசமிருக்கின்ற வேளைகளில் பளளிக்கூடத்துப் பிள்ளைகளின் பெற் றேரிடம் சென்று பிள்ளைகளுக்கு உபயோகமான சங்கதிகளைச் சொலலிவருவாள். இங்குள்ளவாகள் அடிக்கடி உடம்பு சொஸ்த

மில்லையென்று படுத்துக்கொள்ளுகிறார்களே; இதற்கு நிமித்தம் வேறொன்றுமில்லை: ஜனங்கள அடர்ந்து விஷக்காற்று மிகுந்த விடங்களில வசிப்பதுமல்லாமல் அழுககுத்தேய்த்து ஸ்நாநமபண்ணுவது முதலாய்த் தேகசுததிசெய்வதையும் உபேக்ஷிககிறார்கள்; நோய்களுக்கு ஆதிகாரணம் இதுதான் என்று அடிககடி தாயாரம்மாள் சொல்லிவருவது வழக்கம். சமயம்நேர்ந்தபோது இவைகளைப்பற்றியும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளின் பெற்றோருடன் சுருக்கமாய்ச் சொல்லிவருவாள்.

ஒருதடவை தாயாரம்மாள் ஸங்கிராந்திமுதல் உடம்பு சொஸ்தமிலலாமல் படுத்திருந்த ஆண்டாள் என்கிற பெண்ணை விசாரிக்கும்படி போயிருந்தாள்; அபபோது நானும் கூடப்போயிருந்தேன். அசசமயத்தில் ஆண்டாளுவின் அன்னையோடு தாயாரம்மாள் சொன்ன பேச்சுகள் நல்ல நீதிமொழிகளாயிருக்கின்றன. அவற்றை ஒருபோதும் மறக்கக்கூடாதென்று நான் என் மனதில் அபபடியே உறுததிக்கொண்டேன்.

தாயாரம்மாள அவ்வீட்டுக்குப் போனவுடனே ஆண்டாளுவின் அன்னையைக் கண்டு, அம்மா, நான் ஆண்டாளை விசாரித்துப் போகலாமென்று வநதேன். முன்னுக்கு இப்போ கொஞ்சம சவுக்கியந்தானா? ஐயோ பாவம்! இப்போது கொஞ்சம் குணமபோலவே காண்கிறது. சிலநாளைக்குமுன் நான் பாரத்தபோது உடம்பெல்லாம் வெளுதது மிகவும மெலிந்துபோயிருந்தது. எப்படியாவது உடம்பு சீக்கிரம் சொஸ்தமாகவேண்டுமென்று நான் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன். இவளுக்கு உடம்பு நன்றாய்த் தேறிப் பள்ளிககூடத்துக்கு வரும்படியாக இன்னும் வெகுநாள் செலலும்போலிருக்கிறதே என்றாள்.

அதுகேட்டு ஆண்டாளுவின் தாயாரான லக்ஷ்மியம்மாள், மாமி, நீ இக்குழநதையினிடத்தில இவ்வளவு அன்பாய்ப் பார்க்கவந்தாயே, அதுவே எனக்கு வெகு சந்தோஷம்! உடம்பு குணமென்று தான் வைத்தியரும் சொல்லுகிறார், ஆயினும் என் மனதிற்கு ஒன்றும் திருப்தியாயிருக்கவில்லை. நான் எவ்வளவோ பததிரமாகவே உளளைவிட்டு வெளியே வரவொட்டாமல் என்னால் கூடிய உபசாரங்கள் செய்துவருகிறேன். என்னசெய்தாலும் உடமபு நன்றாய்த தேறி முன்போலத் திடமாய்ச் சஞ்சரிக்க இன்னும் சக்தி வந்தபாடில்லை என்றுசொல்லி விசனப்பட்டாள்.

அதுகேட்டுத தாயாரம்மாள், ஆம, நீ மிகவும் வருநதி உழைத்து உன் குழந்தைகளைப் பரிவுடன் பரிபாலித்து வருகிறாயென்பது எனக்கும் தெரியும். ஆயினும் சிலவேளைகளில் கர்தைத்தாணியும் அறிவுமாயிருக்கும்பொழுது உன்னைப்பார்க்க எனக்கு மிகவும் விசனமுண்டாகின்றது. 'அம்மையார் நூற்கிற நூலுக்கும் பையன் அரைஞாணுக்கும் சரி' என்பதுபோல நீ அரும்பாடு

பட்டுக் குருவிபோலத் துளிதுளியாய்ச சம்பாதிக்கிற சம்பாத்தியம் அத்தனையும் வைத்தியச்செலவுக்கே சரியாய்ப்போகிறதே. அரைக்கு நல்லதாய் ஒருபுடவை வாங்கிக்கொள்ளக்கூட பிருதி பிறக்கவில்லையே என்று சொன்னாள்.

லக்ஷ்மியம்மாள் அதுகேட்டு, நீ சொன்னது முற்றும் சரியே. அதென்னகாரணமோ எனகருத் தெரியவில்லை. ஒன்றுமாற்றி ஒன்று எந்நாளும் குழந்தைகள் பாயும்படுக்கையுமாய் இருக்கின்றனவேயொழிய ஒருநாளாவது நிம்மதியாயிருந்தபாடில்லை. வைத்தியன் வீட்டுக்கு நடைநதபடிதான்; மருந்துச்செலவுக்கு ஓய்ச்சலொழிவில்லையென்றாள்.

அதைக்கேட்ட தாயாரம்மாள், எனக்கும் அபபடித்தான் தோன்றுகிறது; இதைப்பற்றி உன்னுடன் கொஞ்சம் பேசவேண்டுமென நான் விருபபங்கொள்கிறேன். நான சொல்லுகிறபடி கேட்பாயானால், இந்தவிஷயத்தில் என்னால் கூடியவரையில் உனக்கு உதவிசெய்கிறேன்; உன் குழந்தைகளை வியாதி இப்படி வருத்தமாட்டாது: என் வீட்டுக் குழந்தைகளும் இன்னும் வேறு சிலர் வீட்டுப் பிள்ளைகளும் சவுக்கியமாயிருக்கிறார்களல்லவா? உன் பிள்ளைகள்மாத்திரம் அபபடி இராததற்கு என்னகாரணம்; நீயே யோசித்துப்பார் என்றாள்.

ல. ஆயின் குழந்தைகளை நான் உபேக்ஷைசெய்வதாகவா நீ நினைக்கிறாய்? அப்படியில்லை, எவ்வளவோ கருத்தாய்க் காப்பாற்றி வருகிறேன்.

தா. "குழந்தைகளை நீ உபேக்ஷைசெய்வதாக நான் சொல்லவில்லை; உனக்குத் தெரிந்தவரையில் பத்திரமாகவே பாதுகாத்து வருகிறாய். ஆயினும் என்னவோ சொல்லுகிறேனென்று என்மேல் கோபங்கொள்ளாதே. நான் உண்மையைச் சொல்லுகிறேன். நீயாகட்டும, உன் குழந்தைகளாகட்டும் நாள்தோறும் இரவில் விஷத்தை உட்கொள்கிறீர்கள். மேலும்....." என்று பாதி பேசிக்கொண்டிருக்கையிலேயே,

ல. இதென்ன, நீ என்னவோ சொல்லுகிறாய்! உன் பேச்சைக் கேட்கையிலேயே எனக்கு உடம்பு நடுங்குகிறதே. எதனால் உனக்கு இந்த எண்ணம் உண்டாயிற்று அமமா?

தா. எப்படியென்று வினவுகிறாய், சொல்லுகிறேன் கேள். முதல்நாள் நான் ஆண்டாளைபபார்க்க வந்தபோது என்னை நீ அவள் படுத்திருக்கும் அறைக்குள் அழைத்துககொண்டுபோனாயே, நினைவிருக்கிறதா? நான் ஸத்தியமாய்ச சொல்லுகிறேன்: அந்த அறைக்குள் சென்ற சிறிதுநேரத்துக்கெல்லாம் என்னுடம்பில் பொறுக்கக்கூடாத ஒருவகை வேதனை உண்டாகி, எப்போ அவ்விடத்தை விட்டு எழுந்து வெளியே போகப்போகிறேன் என்றாயிற்று. ஒரு

நிமிஷகாலம் வந்திருந்தவளுக்கு அப்படியிருக்கும்போது அவ்விடத்திலேயே நிலையாயிருப்பவர்களுக்கு எப்படியிராது! ஆகையால் ஆண்டாள் வெகுநாளாய் உடம்பு சொஸ்தமாகாமல் படுத்திருப்பதும், குழந்தைகளெல்லாம் எப்போதும் நோய்பிடித்துக் கிடப்பதும், நீ அடிக்கடி தலைவலி முதலியவற்றால் தொந்தரைப் படுவதும் எனக்கு ஒரு அதிசயமாய்த் தோன்றவில்லை. நான் சொல்லுகிறபடிகேட்டு நீ என்னுடைய வைத்தியரை வரவழைத்துப் பார்ப்பாயாயின் உனக்கு அனுகூலமுண்டாகும். அவர் மிகவும் சுலபமான வைத்தியர். தினந்தோறும் நீ அவரை உன் வீட்டிற்கு வரவழைப்பாயானால், உன் வீட்டில் குடிகொண்டிருக்கிற வியாதி வெகுவாய் விலகிப்போம். அந்த வைத்தியரில்லாவிட்டால் நான் ஒரு நிமிஷங்கூடப் பிழைத்திருக்கமாட்டேன். உலகத்திலுள்ள நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதியையும் சொஸ்தப்படுத்த அவரால் ஆகாதென்றாலும், அநேகம் வியாதிகளை வரவொட்டாமல் விலக்குவது அவர்க்குச் சுலபமானதுதான்.

ல. அம்மா! போதும் போதும்! ஆண்டாளுக்காக நான் வைத்தியரோடு பட்டபாடு போதும். இதிலேயே என் கை முற்றும் வறண்டு போயிற்று. மறுபடியும் ஒரு வைத்தியனை வைத்துக்கொண்டு நிர்வகிக்க என்னால் முடியாதம்மா.

ஞா. பயப்படாதே, நான் சொல்லப்போவது இன்னதென்று தெரிந்துகொள்ளாமல் வீணே திகில்படாதே. நீ கையில் பொருள் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்பது என் கருத்தேயொழியச் செலவழிக்கவேண்டுமென்பதல்ல. நான் உனக்கு அதிகமான செலவு வைப்பேனானால், கடைசியில் நீ என் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப எனக்கு நிர்வாகமில்லையென்று சொல்லும்படியாகும்; அப்போது என் அருமைமாணாக்கர்களுள் சிலர் எனக்குக் குறைந்துபோவார்களல்லவா? அதற்காக நான் இவ்வளவு பாடுபடுகிறேனேயன்றி வேறில்லை. என்னுடைய வைத்தியருக்கு வாயுபகவான் என்று பெயர். நீ அவரைத் தேடவும் வேண்டாம்; எப்போ வருவாரோவென்று அவர்க்காகக் காத்திருக்கவும்வேண்டாம். உன் வீட்டிலுள்ள கதவுகளையும் கவாக்ஷங்களையும்மாத்திரம் கவனமாய்த் திறந்துவைப்பாயானால் அவர் தாமே வந்து வைத்தியம் பார்த்து விட்டுப்போவார். அவர் தருமவைத்தியரேயன்றி மற்றவர்களைப் போலக் கூலிக்கு மாரடிப்பவரன்று. இப்போது அவரை வரவழைக்காமையாலேதான் நீங்களெல்லோரும் விஷமுண்டவர்களாயிருக்கிறீர்கள்.

ல. அம்மா, விஷமா! அதென்ன? நீ சொல்வது இன்னதென்று எனக்குச் செவ்வையாய்ப் புலப்படவில்லையே. இந்த அறை விலாசமாகத்தானே இருக்கிறது. ஆண்டாளுக்கு உடம்பு சொஸ்த

யில்லாமையால் கதவைச் சாத்திவைத்திருக்கிறேன். கவாக்ஷத்தைப் பற்றிக் கேட்கிறாயோ? அது வெகுநாளாய் உடைந்துபோயிருக்கிறது; திறக்கக்கூடவில்லை.

தா. உடைந்துபோனாலென்ன? சொற்பச்செலவுசெய்தால் புதிதாய்விடுகிறது. என் பேச்சைக் கேள, சுகப்படுவாய். என் வைத்தியா வந்துகொண்டிருந்தால இந்த அறை உனக்கும் உன் நான்கு குழந்தைகளுக்கும் போதுமானதுதான். வெளியிலிருந்து இவவறைககுள் வந்து புகும்போதும, இங்கிருந்து மறுபடி வெளியே போம்போதும் உனக்கு வித்தியாஸம தோன்றவில்லையா? இவ்வறைக்குள் புகும்போது ஒடுக்கமான ஒருவகைத் துர்க்கந்தம் வீசவில்லையா? உனககு ஆயிரம் கிடைப்பதாயிருந்தாலும, ஒருவேளையாயினும் உன் குழந்தைகளுக்குச் சோறுபோடாதிருக்க மனம் வருமா? எவ்வளவு கஷ்டகாலம் வந்தாலும் இராப்பகல் ஓய்விலலாமல் உழைத்தாயினும் அவர்களுக்கு உணவு அளிப்பாயேயொழிய அளிக்காதிருக்கமாட்டாயே.

ல. அப்படி என்றைக்காயினும் இருப்பேனா? ஒருபோதும் இருக்கமாட்டேன். பிள்ளைகள் பசித்தழுதால் என் வயிறு பற்றியெரியுமே.

தா. இவ்வுணவைப்போலவேதான் பரிசுத்தமான காற்றும் பிள்ளைகளுக்கு இன்றியமையாதது. யோசித்துப்பார்க்குமிடத்து உணவைப்பார்க்கிலும் காற்று ஆயிரமடங்கு அதிகமானது என்று சொல்லவேண்டும்; நல்லகாற்றைமாத்திரம் அவாகள் உட்கொள்ளாதிருப்பார்களாயின், நீ அவர்களுக்கு எவ்வளவு உணவு அளித்தாலும் அத்தனையும் அவர்களுக்குப் பயன்படாதாகிவிடும்; (வேண்டுமென்றால் இதற்கு ஒரு பரீக்ஷைபார்: இப்போது நீ அதோ அந்தப் பூனைக்கு வயிறுநிரம்பச் சோறுபோட்டிருக்கிறாயே. நல்லது, அதைப் பிடித்துச் சிறிதுநேரம் ஒரு பெட்டியில் அடைத்துவைத்துப் பிறகு அதைப்பார். மூச்சுததிணறித தவிககும் உயிர்போகிற தருணமாயிருக்கும். நீ மனந்துணிந்து அப்படியே பின்னும் சிறிதுநேரம அதை அடைத்து வைப்பாயானால் சீக்கிரத்திலேயே அது பிணமாய்க்கிடக்கக் காண்பாய். இதற்குக் காரணம் அப்பெட்டிக்குள் மூசசுவிட நல்ல காற்றில்லாமையேயன்றி வேறல்ல. நீ இட்டசோறு அதைச் சற்றேனும் காக்கமாட்டாது) உணவில்லாமல் சிலநாள்வரையில் ஜீவித்திருக்கலாம், காற்றில்லாமல் சில நிமிஷங்கள்கூட ஜீவித்திருக்கமுடியாது. நல்லது, நீ ஒரு நாளைககு எத்தனைதரம் சாப்பிடுகிறாய் சொல் பார்ப்போம்?

ல. எனக்குமாத்திரம் வேறு வழக்கமா என்ன? உலகத்தில் எல்லோரும் சாப்பிடுவதுபோலவே நானும் சாப்பிடுகிறேன். வெகுபேர் ஒருநாளைக்கு மூன்றுதரம் சாப்பிடுகிறார்கள். இடை

யில் ஏதாவது பலகாரம செய்வதுமுண்டு. இரண்டுதரததுககுமேல கைநனைக்காத பெரியோர்களுமிருக்கிறார்கள்.

தா. ஆயிற்றே, அவர்கள் எத்தனைதரம் காற்றை ஏற்றுக்கொள் கிறாகள், அதாவது மூச்சுவிடுகிறாகள தெரியுமா? ஒரு நிமிஷத் துக்கு இருபதுதடவை விதம் மூசசுவிடுகிறார்கள். ஆகவே, இப போது இங்கே பேசின நேரத்துக்குள்ளேயே நீயும் நானும் எதத னைதரம் மூச்சுவிட்டிருக்கிறோமென்பதை மாத்திரம் யோசிததுப் பார்; மேலும், இராக்காலத்தில் நாம் புசிப்பதேயில்லை. மூச்சுமாத் திரம் விட்டுக்கொண்டேயிருக்கிறோமல்லவா?

ல. ஆம, அது மெய்தான், ஆனால் என்ன?

தா. இனி வேறென்னவேண்டும. நாம் உட்கொண்டு மறு படி வெளியேவிடுகிற காற்றெல்லாம் விஷக்காற்றுதான். அந்தக் காற்று மறுபடி நமக்கு உபயோகப்படாது. ஆகையால் நாம் அதை எவ்வளவு சீக்கிரமாய் நமது வீட்டைவிட்டுத் தொலைத்து விடுகிறோமோ அவவளவும் நமக்கு நன்மை. இப்போது உன் வீட்டில் நீ அவ்விதமான விஷக்காற்றைப் போக்கி, என்னுடைய வைததியரான நல்ல காற்றுவரும்படி கதவுகளைத் திறந்துவைக் காமையாலேதான் நீங்களெல்லாரும் பாதி விஷமுண்டிருக்கிறீர் களென்று நான் சொன்னது. இப்போது இவ்வறைக்குள் விஷக் காற்று தவிர வேறில்லை. பொழுது போனவுடனே குழந்தைக ளுடன் நீ இங்கே படுத்துக்கொள்ளுகிறாய். பொழுதுவிடிகிறவ ரையில் இங்குள்ள விஷக்காற்றைத்தானே மாறிமாறிப் பலதரம மூச்சுவிட்டுக்கொண்டிருக்கிறீர்கள். காலையில் எழுந்திருக்கும் போது உனககுத் தலை பளுவாயிருப்பதும், குழந்தைகளுக்கெல் லாம உடம்பு மெலிந்து வெளுத்துப்போவதும் ஆகிய இவையெல் லாம் இதனாலேதான்.

ல. அம்மா, நீ சொல்வதெல்லாம் இப்போது நன்றாய்த் தெரிய வருகிறது. இது இப்படியென்று இதுவரையில் எவரும் என்னுடன் சொல்லவேயில்லை.

தா. போனது போயிற்று. இனி அதைப்பற்றிச் சிந்தித் தாவதென்ன? போனதைச் சிந்திப்பவன் பித்தனல்லவா? இனியா வது நான் சொல்வதைக் கவனிப்பாயானால் சீககிரமே உன் குறை களெல்லாம் வெகுவாய் விலகிப்போம். உன் குழந்தைகளுக்கு உணவளிக்க வீட்டில் ஒன்றுமில்லாமற்போனால், எவ்வளவு வருத் தப்பட்டாயினும் உடனே கடைக்கு ஓடிப்போய் வேண்டியதை வாங்கிக்கொண்டு வருகிறாயல்லவா? அப்படியே வீட்டிலுள்ள நல்ல காற்றெல்லாம் உபயோகப்பட்டுப்போய்ப் பரிசுத்தமான காற்று இல் லாமல் பிள்ளைகளெல்லாம் தவிக்கும்போது சாளரக்கதவுகளை ஏன் திறக்கக்கூடாது? அபரிமிதமான நல்லகாற்று உன் வீட்டுக்குவர

வெளியே காத்துக்கொண்டிருக்கின்றதே. நல்ல காற்றைக்கொள்ள அனுவளவாயினும் உனக்குப பொருட்செலவுமில்லையே.

ல. நல்லது அம்மா? இன்றைக்கே நான் இந்தச் சாளரக்க தவைச் சீர்படுத்துமபடி திட்டம்செய்கிறேன். ஆண்டாள் உடம்பு சொஸ்தமில்லாமல் படுத்துக்கொண்ட நாள்முதல் இந்தக் கதவு ஒடிந்து உபயோகமற்றுக்கிடக்கின்றது.

தா. ஆண்டாளுக்கு உடம்பு சீக்கிரமாய்ச் சொஸ்தமாகாத தற்கு இது ஒரு காரணம். இவள் உட்கொளளுகிற காற்று நாளுக்குநாள் கெட்டகாற்றாய்ப்போய், நல்ல உணவுகளைப் புசிக் கும்படியான பசியை மந்தபபடுததுகின்றது. ஆகாரமில்லாமற் போனால் உடம்பு தானே இளைத்துப்போகின்றது. அதோ அந்தச் சாளரத்தில் தொட்டிகளிலே செடிகள வைததிருக்கிறாயே, அவை களும ஆண்டாளுக்கு உடம்பு குணப்படாததற்கு ஒரு காரணந தான். பகற்காலத்தில் கண்குளிரப் பார்ப்பதறகு அவை அழகா யிருககின்றனவென்பது மெய்தான்; ஆயினும் இரவில் நாம் நித் திரைசெய்யும்போது நமக்கு வேண்டிய நலல காற்றையெல்லாம் அவை உறிந்துகொண்டு விஷக்காற்றை வெளிவிடுகின்றன. நமககு இருப்பதுபோலவே செடிகளுக்கும் மூச்சுவிடுகிற சக்தியுண்டு. பகற்பொழுதில செடிகள் நாம் மூச்சுவிடுகிற விஷக்காற்றை உட் கொண்டு, நமக்கு ஆரோக்கியமான நல்ல காற்றைக் ககக்குகின்றன வாகையால் நமக்கு அனுகூலமானவையென்றும், இராக்காலத்தில் நல்லகாற்றை உட்கொண்டு விஷக்காற்றைக் ககக்குவதனால் நமக்குப் பிரதிகூலமானவையென்றும் சொல்வார்கள். ஆதலின் இந்தச் செடிகளை இவ்விடம்விட்டு வேறு எங்கேயாவது கொண்டுபோய் வைத்துவிட்டால் மிகவும் நல்லது.

ல. இதற்கு நான் என்னசெய்வேன். இந்தச் செடிகளெல் லாம் தன் கண்ணெதிரிலேயே இருககவேண்டுமென்று ஆண்டாள் என் பிராணனைவாங்குகிறாள். நீ சொன்ன சங்கதிகளைச் சொன் னால் ஒருவேளை கேட்பாளோ என்னவோ? இன்றையதினம் சொல் லிப்பாரககிறேன்.

தா. ஆம அம்மா, மனம்கோணாமல் குழநதைகளைக் காப பாற்றுகிறதென்றால் கஷ்டமானகாரியந்தான். உன் கணவனா இறந்துபோனகாலம்முதல் நெற்றிநீர் நிலத்தில்வடிய வேலைசெய்து குழந்தைகளைக் காபபாற்றுவதோடுகூட அவாகளுக்குக் கல்வியும் கற்பித்துக்கொண்டுவருகிறாயாகையால், உனக்கு இப்படிப்பட்ட வீண்செலவு வருவது கூடாதென்று நான் இந்த உபாயம் சொ ல்லவந்தேனேயொழிய வேறில்லை. நான் சொல்லுகிறபடியே இரண்டுமூன்று மாதகாலம் நடந்துபார். குணமிருநதால் வைத் துக்கொள், இல்லாவிட்டால் தள்ளிவிடு. படுக்கையறை விசா லமாயிருக்கும்பட்சத்தில், பகற்பொழுதெல்லாம் கதவுகளைத் திறந்து

வைத்தால், இராவில் படுத்துக்கொள்ளும்போது மூடிவைத்தாலும் வைக்கலாம். இராவிலும் சிறிதளவு திறந்துவைப்பதே உத்தமமானது. ஒருவேளை மழையுங் காற்றுமாய்க் குளிர் அதிகரிக்குமென்று தோன்றினால், அப்போது சாளரத்தின் கீழ்ப்பாதியை மூடிவிட்டு மேற்பாதியைமாத்திரந் திறந்துவைக்கலாம். அப்படிச் செய்தால் காற்று நம் மேல் படாமல் அறையின் மேற்புறத்திலே மாத்திரம் வீசி அறையைச் சுத்தப்படுத்திக்கொண்டிருக்கும். எப்படியிருந்தாலும்காலையில் எழுந்தவுடனே நல்ல காற்று அறையின் ஒவ்வொரு மூலையிலும் செல்லும்படி கதவுகளையெல்லாம் செவ்வையாய்த் திறந்துவிட்டு, பாய் படுக்கைகளை எடுத்து உதறி நன்றாய்க் காற்றும்படி வெயிலில் உலாத்தவேண்டும். அப்படிப்பட்டவிடத்தில படுத்தால் நித்திரையும் சுகமாய் வரும்; காலையிலெழுந்திருக்கும்போது உடம்பும் இலேசாய்ப் படபடவென்று வேலைசெய்யச சந்தோஷமாயிருக்கும். இராத்திரி புசித்த உணவும் செவ்வையாய் ஜீரணமாகிப பசியும் நன்றாய் எடுக்கும்.

ல. அம்மா, நீ சொல்வதைக் கேட்கும்போதே எனக்குப் பரமாநந்தமாயிருக்கின்றது. என் உடம்பு நீ சொல்லுகிறபடியிருந்து எத்தனையோ நாளாகிவிட்டது; காலையிலெழுந்தால் அநேகநாள் பசியே கிடையாது.

தா. எனக்கு அது ஒரு ஆச்சரியமாகத் தோன்றவில்லை. விஷக் காற்றில் படுத்துத் தூங்குகிறவர் எவரும் சுகமாயிரார்கள். இவ்வாறு உச்சுவாஸத்துக்கு நல்ல காற்றைப்போலவே குடிப்பதற்கு நல்ல தண்ணீரும், உடம்புக்கு உழைப்பும்வேண்டும். உலகத்தார்க்கு இவற்றைவிட நல்லமருந்து வேறில்லை. மீன்களுக்கு நீர் எப்படியோ அப்படியே நமக்கு நல்லகாற்று. இவை இன்றியமையாதவையென்று உணர்ந்த பரமகாருணிகனான பரமபுருஷன் இவ்வுலகெங்கும் இவைகளை அபரிமிதமாகப் படைத்திருக்கிறார். அதுமாத்திரமேயல்ல, அவற்றை உபயோகித்துக்கொள்ளாமல உபேக்ஷைசெய்பவர்களுக்கு அதைத தெரிவிக்கும்படி நோய்களையும் உண்டாக்கியிருக்கிறார். இப்படியெல்லாம் இருந்தும் தெரியாமையால் நம்மை நாமே கெடுத்துக் கொண்டு, கடைசியில் ஏதாவது பெருந்துன்பம் நேரிட்டால் பாழுந் தெய்வமே, உன் கோவில் இடியாதா! ஏன் என்னை வருத்துகிறாய்! என்று இப்படிப் பலவாறு கடவுளைப் பழிக்கின்றார்கள். நான் போய்வருகிறேன்; பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு வருகிற நேரமாகிவிட்டது.)

ல. அருமையான இவ்விஷயங்களை எனக்குத் தெரிவித்ததற்காக நான் உம்மை ஒருபோதும் மறக்கமாட்டேன்; உம்முடைய நயமான வைத்தியத்தையும் மறக்கமாட்டேன். என்னைப்போலவே இந்த நயமான வைத்தியமில்லாமல் வருத்தப்படுகிற அண்டைவீட்டுக்காரர்களுக்கும் நான் இச்சங்கதிகளைத் தெரிவிக்கின்றேன்.

(தா. லக்ஷ்மம்மாள், நீ அப்படிச் செய்வாயானால் எனக்குப பின்னும் அதிக சந்தோஷமாயிருக்கும். இந்த உபாயத்தால் குழந்தை கள் சவுக்கியப்பட்டுத் தாய்மார்களுக்குத் தொந்தரையில்லாதிருப் பதுமாத்திரமேயன்றிப பள்ளிக்கூடத்திற்கும் பிள்ளைகள் கிரமமாய் வரும்படியாகும். பலவாறு சொல்லியென்ன? இவ்வுலகத்திலுள்ள ஸகல பிராணிகளுக்கும் இரவும் பகலும் உச்சுவாஸத்திற்குப பரிசுத் தமான காற்றும், குடிக்கவும் குளிக்கவும் நல்ல தண்ணீரும இல்லா விட்டால் ஒருவிதமான சவுக்கியமும் உண்டாகாதென்பது உன் மனதில் உறுதியாய் இருக்கவேண்டும். இவற்றை நீ எவ்வளவு சீக்கிரத்தில் பரீக்ஷைபாாக்கிறாயோ, அவ்வளவுக்கவ்வளவு உனக்கு நன்மை.

இதைப்பற்றி வாஸ்தவமாய் நடந்த கதையொன்று இப்போது எனக்கு நினைவுவருகிறது; சுருக்கமாய்ச சொல்லுகிறேன் கேள். நூறுவருஷங்களுக்கு முன்னே கல்கத்தாநகரத்தில் நூற்றுநாற்பத் தாறு அங்கிலேயர்கள் சிறையாய்ப் பிடிக்கப்பட்டனா; யஜமானன் அவர்களை இருட்டறையென்று சொல்லப்பட்ட ஒரு சிறைச்சாலை யில் அடைத்துவைக்கத் திட்டஞ்செய்தான். காலையில் விசாரிக்க லாமென்று ஒரு இராத்திரிமட்டும் அவன் அவர்களை அங்கே அடைத்துவைக்கச் சொன்னது. ஆனால் அந்த இருட்டறை பதி னெட்டுஅடி சதுரமான ஒரு சிற்றறை. அவர்களை உள்ளே அடைத் தவுடனே அவ்வறையின் கதவைப் பூட்டிவிட்டார்கள். அதில் மிகச் சிறியனவாய் இரண்டு சாளரங்கள் மாத்திரம் இருந்தன; காற்று உட்புகுந்தால் அவற்றின்வழியாகத்தான் புகவேண்டும். கத வைப் பூட்டினவுடனே உள்ளே அடைபட்டவர்களுக்கெல்லாம் பொறுக்கக்கூடாத தாபமுண்டாயிற்று; வரவர அந்தத் தாபம அதிக மாகி மூச்சு அடைக்கத் தலைப்பட்டு, ஒருவர்மேல் ஒருவா விழுந்து போராடிச் சாளரத்தின் அருகேபோய் நிற்கப் பாாத்தாாகள்; சாத் தியப்படவில்லை. சாணளவு சாளரத்தண்டை எத்தனைபேர் போய் நிற்கலாம். கடைசியில் அவ்வறையிலுள்ள காற்றெல்லாம் உபயோ கப்பட்டு எல்லாம் விஷக்காற்றாய்ப்போயின. ஒரு நிமிஷம் கத வைத் திறந்திருப்பார்களாயின், அந்த விஷக்காற்று வெளியேபோய் நல்லகாற்று உட்புகுந்திருக்கும்; அவர்களும் பிழைத்துப்போவார் கள். கதவைததிறககும்படி அவர்கள் எநநேரம் முறையிட்டாலும், அவவறைககுக் காவலாயிருந்த கொடியர்கள அதைக் காதிலேயே போட்டுக்கொள்ளாமல் இருந்துவிட்டாாகள். பதினொருமணிநேரந் தான் அவர்கள் அதனுள் அடைபட்டிருநதது. காலையில் கதவைத் திறநதுபார்த்தபோது 146பேரில் 23 பேர்மாத்திரமே உயிரோடிருந் தனா. அவர்களும் விஷக்காற்றினால் காய்ச்சல்கொண்டு எழுந் திருக்கச் சக்தியற்றவர்களாயிருந்தார்கள்.

ல. கல்கத்தாவில் இருட்டறையைப்பற்றி முன்னமே நான்

கேள்விப்பட்டிருக்கிறேன்; ஆனாலும் இவ்வளவு செய்தி இதுவரையில் எனக்குத் தெரியாது. இக்கொடுஞ்செய்கை செய்தவன் எவ்வளவு கல்நெஞ்சனாயிருக்கவேண்டும். அவ்விதமான அறையில் அவனையே அடைத்துவைத்தால் எப்பாடுபடுவானோ?

தா. ஆ, போதும், போதும்! அவன் எப்படிப்போனாலென்ன; கிணற்றுத்தவனுக்கு நாட்டுவெளப்பமேன்? மனிதர் மூச்சுவிடுகிற காற்று விஷக்காற்றென்றும், அது இவ்வளவு சீக்கிரத்தில் மனிதரைக் கொல்லுமென்றும் அவனுக்கு ஒருவேளை தெரியாதிருந்தாலுமிருக்கலாம். அதன் கொடுமை இப்படிப்பட்டதென்று இப்போது நமக்கு நன்றாய்த் தெரிந்திருப்பதால் நம்மவீட்டில் ஒரு மூலைகூடக் கல்கத்தாவின் இருட்டறைபோலாகாதிருக்கும்படி நாம் கருத்தாய்ப் பார்த்துவரக்கடவோம். அதோ மணி இரண்டு அடிக்கிறது. நேரமாய்விட்டது, நான் போய்வருகிறேன்.)

நாக்கும் சுவையுணர்ச்சியும்.

நமக்குக் கடவுள் அளித்திருக்கின்ற மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளும் இவ்வுலகவாழ்க்கைக்கு இன்றியமையாதவைகளேயானாலும், வாய் ஒன்றுதவிர மற்ற நான்கு பொறிகளுக்கும் முக்கியமாய்த் தனித்தனி ஒவ்வொரு செய்கையே குறிக்கப்பட்டிருக்கின்றது. வாய்க்கோ அப்படியில்லை; இரண்டு செய்கைகள் குறிக்கப்பட்டிருக்கின்றன: அவையாவன, நமது உட்கருத்தை வெளியிட்டுப் பேசுவதும், உடம்பைக் காப்பாற்றுவதற்கு இன்றியமையாததான உணவை உட்கொள்ளுவதுமாம். உணவை உட்கொள்ளுவது வாயேயாயினும், அவற்றுள் ஆரோக்கியமான உணவு இன்னதெனவும் ஆரோக்கியமல்லாத உணவு இன்னதெனவும் பகுத்தறியும் திறமையுடையதான நாக்கு ஒன்றில்லாவிடின் அத்தனையும் நமக்குத் தீங்காகவே முடியும். ஏனெனில் உணவைப் பகுத்தறியும் திறமை வாய்க்கு இல்லையாதலால் உடம்புக்கு ஒவ்வாத உணவையும் வாய் உட்கொண்டு கேடு விளைவிக்கும். அப்படிக்கு நேராதபடி உணவுபோகிற வழியே நின்று வெகு கருத்தாய்க் காத்திருந்து தீயஉணவு மேலேபட்டமாத்திரத்தில் நாக்கு அதை விலக்குகின்றது. நாக்குக்குச் சுவையை உணரும்படியான வல்லமை அளித்திருப்பதற்குக் காரணம் இதுதான்.

புசிக்கிற போசனங்களிலுள்ள சுவையை நாம் நாக்கினால் உணர்கிறோம் என்பது வெகுவாய் யாவர்க்கும் தெரிந்தவிஷயமே. ஆயினும் நமது தேகத்திலுள்ள மற்றத் தோல்களைப்போலவே நாக்கும் ஒன்றாயிருக்க, இதற்குமாத்திரம் இத்திறமை

எப்படியுண்டாயிற்று என்பதை ஒருவரும் ஆலோசிப்பதில்லை. நாக்கிலும் சுவையறியும் தன்மை எப்புறத்திலிருக்கிறது என்பதையும் யாரும் சிந்தித்ததில்லை. நுட்பமாய் ஆய்ந்துபார்க்குமளவில் சுவையறியும் திறமை நாக்கின் நுனியில் மேற்புறத்திலேயே முக்கியமாயிருக்கின்றதெனத் தெளிவாய்த் தெரியவருகின்றது. அவ்விடத்தில் சில நரம்புகளிருக்கின்றன; அவை தாம் ரசனேந்திரியத்திற்கு இருப்பிடம். அந்த நரம்புகளுக்குச் சாதாரணமான பரிசவுணர்ச்சி மாத்திரமேயன்றி உருசியின் அறிவையும் மூளைக்கு எட்டவிடும்படியான வல்லமை அமைக்கப்பட்டிருக்கின்றது. உருசியை உணர்வதற்கு ஏற்றவண்ணமாய் இடையிடையே சிறுகுழிகளோடு எவ்வளவு அற்புதமாக நாக்கு நிருமிக்கப்பட்டிருக்கின்றது பாருங்கள்.

நாக்கின் நுனியினாலேதான் நாம் உருசியறிகிறோம்; நடுவினால் அறிவதில்லையென்பதை எளிதில் பரீக்ஷித்துத் தெரிந்து கொள்ளலாம். வெகு ஜாக்கிரதையாய் நுனியிலேபடாமல் ஒரு கற்கண்டுக்கட்டியை நாக்கின் நடுவே வைத்துப்பாருங்கள்; அப்போது அதன் மதுராரசம் அணுவளவும் நமக்குத் தெரியாது. அப்படியே மறுபடியும் அவ்விடத்தில் இஞ்சியைவைத்துப் பாருங்கள்; அதை உள்ளங்கையில் வைத்தால் எவ்வளவுகாரம் உறைக்குமோ

அதைப்பாாக்கிலும் அதிகம் உறைக்காது. அதன் ரசம் கொஞ்சம் கரைந்து நாக்கின் நுனிக்காயினும் தொண்டையண்டையாயினும் வந்தால்தான் சிறிதளவு சுவைதோன்றும். வாயின் மேற்புறத்திலோ, நுனியிலாயினும் மத்தியிலாயினும் எங்கும் சுவையுணர்ச்சி இடையாது. ஆனாலும் அநேகர்க்கு அவ்விதமான உணாச்சி உண்டாகின்றதே; அதற்குக் காரணம் என்னவெனில், உணவு நாக்கில் விழுந்தபோதே மேல்வாயினால் அதை அழுத்துகிறோம். அழுத்தினவுடனே சுவையுணர்ச்சி உண்டாகின்றதாகையால், நாவினால் உணர்கிறோமென்பதும் அண்ணத்தினால் உணர்கிறோமென்பதும் பகுத்தறியக்கூடாமற்போகின்றது. அப்படியன்றி ஒரு விரல்கொண்ட சர்க்கரையையாவது உப்பையாவது எடுத்து நாவின்மேல் படாமல் அண்ணத்திலே வைப்போமாயின், அது நன்றாய்த் தெரியும்; சாதாரணமான பரிசவுணர்சசிமாத்திரம் உண்டாகுமேயன்றி மதுரரஸமாவது உப்புரஸமாவது சிறிதும் தோன்றாது. நாக்கிலே படாமலே சுவையை அறியவேண்டுமாயின், தொண்டையின் அடிப்புறம்வரையில் விரலைக்கொண்டுபோகவேண்டும். நாக்கு நுனிக்கு இரண்டாவது தொண்டையின் பிரவேசத்திலேதான் சுவையுணாசசியிருக்கின்றது. அதன் வழியாகவே உணவுகளெல்லாம் உட்செல்லவேண்டும். உணவை விழுங்கினபிற்பாடும் அதிலிருக்கும தித்திபபோ, காரப்போ, புளிப்போ சிறிதுநேரம் வரையில் அவ்விடத்திலே தங்கியிருக்க நமக்குத் தோன்றுகிறதல்லவா? ஆயின், சுவையை அதிக ஆவலாய் உணாவிரும்பும்போது நாக்கை நாம் அண்ணத்தோடு அழுத்துகிறோமே; அபபடியழுததி அநேகர் நொட்டையும் விடுகிறாாகளே; அதேனென்று கேட்பீாகளோ? சுவை அறியவேண்டிய பொருள் நாக்கின் நுனிப்புறத்திலுள்ள சுவையறியும நரம்புகளின்மேல் நன்றாய் அழுநதி அதன் திறமையை அதிகமாய்த் தூண்டிவிடவேண்டுவதற்காகவேயாம். அதனாலேதான் நாம் தின்னும் பண்டங்களை நாக்குக்கும் அண்ணத்திற்கும் மத்தியில்வைத்து நன்றாய் அழுத்தினால சுவை உணர்ச்சி அதிகமாய் உண்டாகின்றது, சும்மா நாக்கின்மேல் வைத்திருந்தால் அத்தனையாய் உண்டாவதில்லை.

இவ்வாறு நாககு உருசியறிவதற்கு இன்றியமையாத கருவியாயிருப்பதுமாத்திரமேயன்றி, உட்கருத்தை வெளியிட்டுப்பேசுவதற்கும் நூல்களை ஓதிக் கற்பதற்கும் முதற்கருவியாயிருக்கின்றது. நாவில்லாதவர் ஒருபோதும் பேசமாட்டார்கள். மனிதர்கள் நல்லோராவதும தீயோராவதும அநத நாவினாலேதான். ஆனதுபற்றியே,

"தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு"

என்றார் நாயனாரும். இத்தன்மையான ஒரு மாமிசகண்டமாகிய நாக்கை நமக்கு அளித்துக் காக்கின்ற கடவுளிடத்தில் நாம் எவ்வளவு நன்றியுடையவர்களாகவேண்டும்!

விச்வந்தரராஜன் கதை.

நிலவளமும் நீர்வளமும் அமைந்து கல்விப்பொருளிலும் செல்வப்பொருளிலும் குறைவில்லாதவர்களுக்கு உறைவிடமாகிய விச்வநகரமென்னும் பட்டணத்திலே விச்வாமித்திரன் என்று ஒரு ராஜன் அரசாட்சிசெய்துகொண்டிருந்தான். அவனது செங்கோன்முறைமை யாவரும் கொண்டாடத்தக்கதாயிருந்தது. அவனாட்சியில் தருமம் நான்குபாதமும் சரியாகவே நடந்தது. தன்னால் வருவன, பிறரால் வருவன, தெய்வத்தால் வருவனவென்னும் மூவ்வகைத் துன்பங்களுமில்லாமல் குடிகள் சகலவிதமான செல்வமும்பெற்றுச் சுகமாக வாழ்ந்திருந்தார்கள். மாதம் மும்மாரிபெய்து சகலவிதமான தானியங்களும் காலந்தவறாமல் கிரமமாகவே விளைந்துகொண்டிருந்தன; காலிகள் விசேஷமாக விருத்தியடைந்து குடிகளுக்கு எல்லாச் சிறப்புகளையும் அளித்துவந்தன. அப்படிப்பட்ட சீரானராஜ்யத்திலே விச்வாமித்திர மகாராஜன் மிகவும் பரிசுத்தமான மனது உடையவனாய், எல்லாவிஷயங்களிலும் தன்னுயிரைப்போலவே மன்னுயிரையும் மதித்து, ஈவு இரக்கம், தானம் தருமம், சத்தியம் தவம், பூததயை பச்சாத்தாபம் முதலிய பல நற்குணங்கள் உள்ளவனாய், ராமராஜ்யமென யாவரும் கொண்டாடும்படி குடிகளைக் காப்பாற்றிவந்தான்.

அந்த விச்வாமித்திர மகாராஜனுக்கு ஒரு குமாரன் அவதரித்தான். மகன் பிறந்தபோதே அவ்வரசன் ஆநந்தக்கடலில் ஆழ்ந்து, நாநாதேசங்களிலுமுள்ள வேதியர்களை வரவழைத்து அவனுக்கு விச்வந்தரனென்ன நாமகரணம் செய்தான். அம்மகனைப் போஷிக்க எட்டுப்பேர் தாதிமார் ஏற்பட்டார்கள். அவர்களுள் இருவர்தொழில் குழந்தைக்குப் பால்கொடுப்பது; இருவர்தொழில் எடுத்துச் சீராட்டிக் கண்வளரச்செய்வது; இருவர்தொழில் காலையிலும் மாலையிலும் நீராட்டிச் சுத்திசெய்வது; மற்றிருவர்தொழில் எண்ணெய் பால் முதலியவை வேளைதப்பாமல் புகட்டிப் பாதுகாத்துவருவது. இப்படியாக எட்டுத்தாதிமார்களால் ஆதரிக்கப்பட்டு அவன் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாகத் தடாகத்தில் தாமரை வளர்வதுபோல வளர்ந்துவந்தான். வித்தியாப்பியாஸம் செய்யும்படியான வயது வந்தவுடனே அநந்தங்கலைகளில் ஆழ்ந்த பண்டிதர்களான ஆசிரியர்களிடத்தில் நான்குவேதமும், சிக்ஷை வியாகரணம் முதலிய ஆறுவேதாங்கங்களும், அரசர்களுக்கு இன்றியமையாதனவையான சகல தருமசாஸ்திரங்களும், தனுர்வித்தை, அஸ்திரவித்தை, சஸ்திரவித்தை முதலிய ஆயுதவித்தைகளும் இவற்றோடு நாநாதேசபாஷைகளும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து பிதாவைப்

பார்க்கிலும் பதின்மடங்கு மேன்மைபெற்றவனுயினன். இவ்வித்தைகளை கற்கக்கற்க அவற்றுடன் அவனுக்கு ஆத்தும குணங்களும் விருத்தியாகிககொண்டு வந்தன. ஜீவகாருணியமென்பது அவன் கொடுத்தவர்கரு உண்டு; பெருங்கொடைவள்ளலென்ருல அவனுக்கே தகும். அவனிடம வந்து யாசித்துத் தம மனோரதம நிறைவேருமல் வெறுங்கையோடு திரும்பிபபோனவர் ஒருவருமில்லை. இளமைப்பருவததிலேயே இத்தன்மையான உததம குணங்கள் அவனிடததில குடிகொள்ளவே, அவனுடைய பேரும் பிரசிததியும் பத்துத் திககுகளிலும் போய்ப் பரவலாயின.

இளமைப்பருவம் கழிந்து இல்லறம நடத்தத்தக்க வயது வந்தவுடனே, அவனைப்போலவே புறத்தழகுமாத்திரமேயன்றி நற்குண நற்செய்கைகளாகிய அகததழகும் அமைந்திருக்கப்பெற்ற மாதிரியென்னும் ஒரு மாது சிரோமணியைத தேடி, விச்வாமித்திர மகாராஜன் விசவந்தர மகாராஜனுக்குத் தேசாதேசத்து ராஜாக்களையும் வரவழைத்து, வெகு வைபவமாய்க் கலியாணமசெய்வித்தான். அவ்வில்லறத் துணைவியோடுகூட விச்வந்தரராஜன் க்ஷததிரியர்களுக்குரிய ஸகல தருமங்களையும் நோமையாக நடததிக்கொண்டு, முக்கியமாய் இரப்போாகளுக்கு இஷ்டபூர்த்தி செய்விபபதிலேயே அதிக உற்சாகமுடையவனுயிருந்தான். காலக்கிரமத்திலே அவ்விளவரசனுக்கும் கிருஷ்ணனென்று ஒரு புதல்வனும், ஜாலினி என்று ஒரு புதல்வியும் பிறந்தார்கள்.

இப்படியிருககை ஒருநாள் அவ்விளவரசன் ராஜமாளிகைக்குச் சிறிதுதூரம் அப்பாலுள்ள தமது உத்தியானவனத்துக்குப் போககருதி ரதத்தின்மேல் ஏறினன். அந்த ரதத்தின் அழகை வர்ணிக்க நம்மாலில்லை: வச்சிர வைடூரிய கோமேதக புஷ்யராக மாகத மாணிக்க இந்திரநீல முக்தா பிரவாளமென்கிற நவரத்தினங்கள் இழைத்து முழுத் தங்கததினுல் வெகு விசித்திரமாக அலங்கரிக்கப்பட்டுக் கோடிசூரியன் உதித்தாற்போல ஜகஜ்ஜோதியாயிருந்தது. சிங்கம் புலி முதலான ராஜ சின்னங்களாகிய பற்பல விலங்குகளின் பிரதிமைகள் இடையிடையே நாட்டப்பட்டுக் காண்போர்க்கு வெகு கமபீரமான காட்சியளிக்கத்தக்கவையாயிருந்தன. மிகவும் உததமமான அச்வ லக்ஷணங்களெலலாம் அமைந்து வாயுவேக மனோவேகமாய்ப் பறந்தோடத்தக்க எட்டுக் குதிரைகள் பூட்டிய அவ்விரததின்மேலேறி அவன் ராஜவீதிவழியே சென்றுன். செல்லும்போது ஜயபேரிகள் கோஷித்தன; தேரிலே சுற்றிக் கட்டிய மணிகளெல்லாம் கணகணவென்று சப்தித்தன; ஜய விஜயீபவ என்று எப்புறமும் அந்தணர்கள் ஆசீர்வாதம பண்ணினுர்கள்; வயது முதிர்ந்தவர்களான குலப்பெண்டிர்கள் புஷ்பங்களையும பொரிகளையும் கந்தப்பொடிகளையும் வாரி இறைத்தாாகள். இத்தன்மையான ராஜவீதியிலே தேரின்மேலேறிக்கொண்டு விச்வந்தர

ராஜன் விநோதமாக வலம் வரும்போது நடுவழியே வேதியன் ஒருவன் எதிர்ப்பட்டு, ஜய விஜயீபவ என்று அவ்வரசனை வாழ்த்தி, ஓ மகாப்பிரபுவே, இரப்போர்க்கு இல்லையென்று சொல்லாத உதாரகுணமுள்ளவனே, ஸகலதேசத்து ராஜாக்களும் வந்து பணியும் பாதாரவிந்தத்தையுடையவனே, பகுதூரதிக்குகளிலும் பரவிய உனது பெரும்புகழைக் கேள்விப்பட்டு, என தரித்திரத்தை ஒரேதடவையாய்த் தீர்த்துக்கொண்டு சுகப்படலாமென்று நெடுந்தூரதேசத்திலிருந்து உன்னைத் தேடிக்கொண்டு இவ்விடம் ஓடிவந்தேன். என் மனோரதத்தைப் பூர்த்திபண்ணி என்னை அனுப்பவேண்டும். இப்பொழுது நீ ஏறிச் செல்லுகிற தங்கத்தேரை எனக்குக் கொடுத்துவிடவேண்டும். உன்னை யாசித்துவிட்டுப் பிறகு மற்றொருவரிடம் போவது எனக்கும் சரியன்று, உனது பெருமைக்கும் இழிவானது, என்றிப்படி பலவாறு வேண்டிக்கொண்டான். அதைக் கேட்டவுடனே பெருங்கொடை வள்ளலாகிய அவ்விளவரசன் திடீரென்று தான் ஏறிவந்த தங்கத்தேரைவிட்டிழிந்து சிறிதளவும் சிந்திக்காமல் உடனே அதை அவ்வேதியனுக்குத் தானம் செய்து, ஓ பிரமகுலத்தில் தோன்றிய தவமுனிவரே, அடியேன் இவ்வுலகவின்பத்தை வெறுத்துப் பரலோகவின்பத்தையே பெரிதாகக் கருதியிருக்கிறேன்; அந்தப் பேரின்பம் அடியேனுக்கு உண்டாகும்படி அனுக்கிரகித்துப் போகக்கடவீர் என்றான். அவ்வண்ணமே ஆசீர்வதித்து வெகு சந்தோஷமாய்த் தங்கத்தேரை ஓட்டிக்கொண்டு அவன் தன் ஊருக்குச் சென்றான். இளவரசனும் காலால் நடந்து திரும்பி அரண்மனை வந்துசேர்ந்தான்.

இவ்வாறிருக்க மற்றொருநாள் விசுவந்தரமகாராஜன் ஏதோ கொலுவிருந்து அன்றையதினம் ஊர்கோலம் வரும்படி, பொன் வெள்ளி ரத்தினாபரணங்களாலும் பட்டுவஸ்திரங்களாலும் வெகு விசித்திரமாகச் சிங்காரிக்கப்பெற்ற ராஜவர்த்தனன் என்னும் பட்டத்து யானையின்மேல் நவரத்தின கசிதமான அம்பாரியிலேறிக்கொண்டு ராஜவீதிவழியாய்ப் பரிவாரங்கள்சூழப் புறப்பட்டான். புறப்பட்டுச் சிறிதுதூரம் போவதற்குள்ளேயே மற்றொரு யாசகனெதிர்ப்பட்டு, “ஓ மகாப்பிரபுவே, ஜய விஜயீபவ” என்று அவ்விளவரசனை வாழ்த்தி, ஓ பூலோக தேவேந்திரனே, யாசகர்களின் குறை தீர்க்க வந்த கல்பகவிருக்ஷமே, நான் கேட்ட பொருளைத் தந்தருளுவாயாக. உன்னிடம் வந்து மறுபடி மனக்குறையோடு திரும்பிப்போனவர் ஒருவருமில்லையாகையால், உன் முகத்தைப் பார்க்கும்போதே சகல சாம்பிராஜ்யமும் கிடைத்ததுபோல என் மனங் குளிர்ந்து போயிற்று. இப்பொழுது நான் உன்னிடத்தில் ஒன்று யாசிக்க வேண்டுமென்று வந்தேன். இப்போது நீ ஏறிச் செல்லுகிற யானையை அதன்மேலுள்ள சர்வாலங்காரங்களோடு அப்படியே எனக்குக் கொடுத்துவிடவேண்டும், சற்றும் ஆலோசிக்கலாகாது என்றான்.

அதைக்கேட்ட விச்வந்தரராஜன் ஒரு நிமிஷம் ஆலோசித்து உடனே வாகனத்தைவிட்டிறங்கி தக்ஷணமே பட்டத்துயானையென்றுகூடப் பாராமல் அதை அப்படியே அவ்வேதியனுக்குத் தானம் பண்ணிவிட்டு, ஓ அந்தணர் பெருமானே, எனக்கு எல்லாப் பதவிகளிலும் உத்தமமான பதவி கிடைக்கும்படி ஆசிர்வதித்துப் போகக்கடவீர் என்று பிரார்த்தித்தான். அவ்வண்ணமே ஆகக்கடவதென்று அநுக்கிரகித்து அவ்வேதியன் யானையுடன்கூடத் தன்னிருப்பிடம் போய்ச்சேர்ந்தான்.

இச்செய்தி கேட்ட விசவாமித்திரமகாராஜன் தன் மகன் வீட்டுக்கு வந்தவுடனே அவனை நோக்கி, இதென்ன நீ இப்போது உன் மனம்போனபடியெல்லாம் செய்யத்துணிந்தாய், "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷமாம்" என்ற பழமொழி நீ கேட்டதில்லையா? கொடையென்றாலென்ன? அதற்கும் ஒரு அளவில்லையா? ஒருவன் சம்பாத்தியத்தில் இவ்வளவு மிகுத்தவேண்டுமென்றும்; தனக்கும், தென்புலத்தார்க்கும், தேவர்க்கும், அதிதியர்க்கும் செலவழிக்க வேண்டியது இவ்வளவென்றும் நூல்கள் முறையிடுகின்றனவே! "வளவனாயினு மளவறிந்தழித்துண்" என்றும் சொல்லியிருக்கிறதே. அது தெரியாமல் நீ இரண்டொருநாளைக்குமுன்னே அற்புதமான ரதத்தை யார்க்கோ கொடுத்துவிட்டாய்; அதுதான் போகட்டுமென்று பார்த்தேன், இன்று நம்முன்னோர்களெல்லாம் அநுபவித்துவந்த பட்டத்துயானையைப் பறிகொடுத்துவிட்டாய்; இப்படிச் செய்ய ஆரம்பித்தால் நமது செல்வம் எத்தனைநாளைக்குத் தாங்கும். நாமும் பக்கிரியாய்ப் பறந்தோடவேண்டுவதுதானே. போனது போயிற்று; இனியாவது நீ ஒரு கட்டில் நிற்பதானால்தான் இவ்விடத்தில் வாசம்பண்ணலாம்; இல்லாவிடின் இப்பட்டணத்தை விட்டு ஓடிப்போகவேண்டுவதுதான் என்றான்.

அதுகேட்டு அவ்விளவரசன் நீங்கள் என்னசெய்தாலும் செய்யுங்கள்! கொடுப்பதினின்றும் என் மனம் ஒருபோதும் திரும்பாது.

"சாதலி னின்னாத தில்லை யினிததூஉம்
ஈதலி யையாக் கடை."

"இத்தலகைகு பின்ப மறியார்கொ லுமுடைமை
வைத்திழக்கும் வன்கணவர்"

எனவும் கூறியிருக்கிறார்களல்லவா? ஆதலின் இரப்போர்க்கு இல்லையென்பதினும் இறப்பதே நலம். அப்படி அடியேன் இங்கிருக்கத் தமக்கு மனமில்லையாயின், இதோ முனிவர்கள் வசிக்கும் தபோவனம் போய்ச்சேருகிறேன் என்று சொல்லிவிட்டு வனவாசம் போக நிச்சயித்தான். போம்போது தன் மனைவியுடன் சொல்லிவிட்டுப் போம்படி அவளிடத்தில் இச்செய்தியைத் தெரிவிக்க, அவள், உன்னைவிட்டு நான் நிமிஷங்கூடப் பிரிந்திரேன். நீ போகுமிடத்திற்கு என்னையும் கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்றாள். அது

கேட்டு அவன், நீ ஒருபோதும் காட்டிற்போய்ப் பழகாதவளாதலால் புதிதாய் அவ்விடங்களைப் பார்க்கும்போதே திகிற்படுவாய்; மேலும் கல்லும்முள்ளும் செறிந்த காட்டுவழியில் தாமரைமலரினும் மெல்லியதான உன் அடிகளைவைத்து நீ எப்படி நடந்துவருவாய்? பின்னும் நமது குழந்தைகள் உன்னைவிட்டுப் பிரிந்திராவே. அவைகளை எப்படி அழைத்துக்கொண்டு போகிறது! ஆதலின் நீ இங்கேதானே இரு. நான் சிலகாலம் காட்டில் வசித்துவிட்டுச் சீக்கிரமே திரும்பி வந்துவிடுகிறேன் என்றான். அதற்கு அப்பெண்மணி, உன்னைவிட்டுப் பிரிந்திருப்பது ஒன்று எனக்குப் பொறுக்கக்கூடாதேயன்றி மற்றவையெல்லாம் பொறுக்கக்கூடியவைதாம். நீ இருக்குமிடம் எதுவோ அதுவே எனக்குச் சுவர்க்கலோகம்.

"செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை"

என்றபடி, நீ என்னைவிட்டுப் போவாயாயின் மறுபடி வந்து என்னை இங்கே காணமாட்டாய், என்று இப்படிப் பலவாறு சொல்லித் தன்னைவிட்டுப் பிரிவதில்லையென ஒரேபிடியாய்ப் பிடிக்கவே, அவ்வில்லறத் துணைவியோடுகூடப் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு கால்நடையாகவே அவன் ஆரணியத்துக்குப் போகப் புறப்பட்டான். அவன் புறப்படும்போது அவனோடுகூட அப்பட்டணத்துப் பிரஜைகளெல்லாம் அவ்வுத்தமராஜனைவிட்டுப் பிரியப்பொறாமல் பின்தொடர்ந்துபோயினர்.

அவ்வண்ணமே நகரமெல்லாம் திரண்டுருண்டு காட்டுக்குச்சமீபத்தில் போகும்போது அங்கே யாரோ ஒரு தவமுனிவர் எதிர்ப்பட்டு அந்தப் பிரஜைகளை நோக்கி, நீங்கள் ஏன் இப்படி அழுதுகொண்டுபோகிறீர்கள்! எங்கேபோகிறீர்கள் என்று கேட்க, அந்த ஜனங்கள் தன்னுயிரைப்போல மன்னுயிரைப் பாதுகாத்துவந்த இவ்விளவரசர் நாட்டைத்துறந்து காட்டுக்குப் போய்விடுகிறார். இவரை விட்டிருக்கமாட்டாமல் நாங்களும் இவருடன்கூடப் போகிறோம் என்றார்கள். அதுகேட்டு அம்முனிவர் பல நல்வார்த்தைகள் சொல்லி அவர்களையெல்லாம் பட்டணத்துக்குத் திருப்பிவிட்டார்.

கூடவந்தவர்களெல்லாம் போய்விடவே விச்வந்தர மகாராஜன் மனையாட்டியும் தானுமாய்க் குழந்தைகளை அழைத்துக்கொண்டு வழிதுறையில்லாமல் பயங்கரமான காட்டில்புகுந்து மெல்லமெல்ல நடந்துபோய், அங்கே முனிவர்கள் பலர் வசித்துக்கொண்டிருந்த ஓரிடத்திலே பர்ணசாலையொன்று போட்டுக்கொண்டு தபோவேடம் பூண்டு காட்டிலுள்ள கனிகிழங்கு முதலியவைகளையே உணவாகக்கொண்டு வசித்திருந்தான்.

இவ்வாறிருக்கும்போது ஒருநாள் அவ்வனத்தில் காய்கிழங்குகள் வெட்டிக்கொண்டுவரும்படி மாத்திரியானவள் பர்ணசாலையைவிட்டு

வெளியேபோயிருந்தான். அத்தருணத்தில் யாரோ ஒருவன் விசுவந்தராஜனுடைய கீர்த்தியைக் கேள்விப்பட்டு ஒரு யாசகனாக வேஷம்பூண்டு வந்து, ஓ தருமராஜனே, நீர் எவ்வளவு கஷ்டத்தை அனுபவித்தாலும், தேஹியென்று வந்தவர்களுக்கு நாஸ்தியென்று ஒருபோதும் சொல்லாத உத்தமபுருஷனென்று ஜகமெல்லாம் உம்முடைய புகழ் விளங்குகின்றது. இப்போது எனக்குப் பணிவிடைக்காரன் ஒருவனுமில்லை; உம்முடைய குழந்தைகளை இரண்டையும் எனக்குக் கொடுத்துவிட வேண்டுகிறேன் என்றான். அதுகேட்டு அவ்வரசன் இன்னது செய்கிறதென்று தோன்றாமல் சிறிதுநேரம் மயங்கிக்கொண்டு நின்றான். அதைக்கண்டு அந்த யாசகன், என்ன யோசிக்கிறீர், இளம்பிள்ளைகளை எப்படி கொடுத்துவிடுகிறதென்று விசாரப்படுகிறீரா என்ன? பெருங்குடைவள்ளலென்று பிரசித்திபெற்ற நீர் இப்போது மயங்குவீராயின், இத்தனைநாளாகத் தேடிய புகழ் அத்தனையும் வீணாய்விடும். மிக்க மனமகிழ்ச்சியோடு இச்சிறுவர்களை எனக்குக் கொடுத்து என் மனோரதத்தைப் பூர்த்திசெய்யவேண்டும் என்றான். அதற்கு விச்வந்தரன், மற்றொன்றிற்கும் நான் மயங்கவில்லை; இக்குழந்தைகளுக்கு இன்னும் தாயைவிட்டுத் தனியே இருக்கும்படியான வயது வரவில்லையே; இப்பொழுது தனியே அனுப்பிவிட்டால் ஒருவேளை ஏங்கி இளைத்துப்போகுமோவென்று விசனமாயிருக்கிறது. மேலும் இவைகளைப் பத்துமாதம் சுமந்துபெற்ற தாயின் அனுமதியில்லாமல் கொடுத்துவிடவும் எனக்குச் சுவாதீனமில்லை; அதற்காகவே சற்று ஆலோசிக்கிறேன் என்றான். அதைக்கேட்டு அந்த யாசகன் அப்படியில்லை; பிள்ளைகள் பிதாவினுடைய பொருளேயன்றி மாதாவின் பொருளல்லவென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன; ஆதலால் இவற்றைக் கொடுத்துவிட உமக்கு அதிகாரமுண்டு. உடனே நான் கேட்டபடி கொடுப்பதானால் சொல்லும், இல்லாதபக்ஷத்தில் இதோ நான் போய்விடுகிறேன், இந்தப் பிரசித்தி உமக்கே இருக்கட்டும் என்றான். அந்தப் பேச்சைக்கேட்கப் பொறாமல் தக்ஷணமே அரசன் தன் அருமைக்குழந்தைகள் இரண்டையும் எடுத்து அவன் கையில் கொடுத்துவிட்டான். கொடுத்தபோது பூமி நான்குதரம் கிடுகிடென்று நடுங்கியது. அதுகண்டு அவ்வாரணியத்திலுள்ள முனிவர்களெல்லாம் இதென்னவென்று பிரமித்து, இங்கே மகோதாரனான விச்வந்தராஜன் வந்திருக்கிறானே, அவன் எதாவது ஸாஹஸச்செயல் செய்திருக்கவேண்டும் என்று சொல்லி அதன் உண்மையைக் கண்டறிய ஓடிவந்தார்கள். எதற்கும் அஞ்சாமல் சிறிதும் நெஞ்சுருக்கமில்லாதவனாய் வந்த வழிப்போக்கன் தாய்தகப்பன்மாரைவிட்டுப் பிரித்து அருமைக்குழந்தைகளை அழைத்துக்கொண்டு போய்விட்டான்.

(இன்னும் வரும்)

பர்மா, சியம் தேசங்கள்.

இவ்வாசியாகண்டத்தின் தென்பாகத்திலே இரண்டு பரியாயத்தீவுகள இருக்கின்றனவென்பது வெகுவாய் அநேகர்க்குத் தெரிந்திருக்கலாம. அவற்றுள் இவ்விந்துதேசம ஒன்று; மற்றொன்று இதற்குக் கிழ்ப்புறத்திலுள்ளதாய்ச் சில சமயங்களில் கீழிந்தியாவெனவும் பெயர் வழங்கபபெற்றிருக்கின்றது. அந்தப் பரியாயத்தீவிலே பர்மா, சியம, ஆனம், காம்போதியா, குறுகிய பூமியான மலாக்காமுதலிய ராஜ்யங்கள் அடங்கியிருககின்றன.

அத்தேசமானது தெற்கு வடக்காக ஓடுகின்ற கோணலான நான்கு மலைத்தொடர்களால் இயற்கையிலேயே வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவற்றிற்கு இடையிலுள்ள கணவாய்களில் ஐராவதிமுதலான பல பெரிய ஆறுகள் பிரவகிக்கின்றன; அந்த ஆறுகள் வடக்கே வெகு வேகமாய் மும்மரமாகப பெருகி வருகின்றன; வரவரத் தெற்கே சமபூமியானகையால் வேகம் அத்தனை அதிகமில்லையானாலும் இருந்தாற்போலிருந்து திடீரென்று பெருக்கெடுப்பதால் மிகவும அபாயகரமாயிருககின்றன; இதற்காகவே அவ்விடங்களிலே ஆற்றோரங்களெல்லாம் வீடுகள் வெள்ளத்தில அடித்துக்கொண்டு போகாதபடி, கீழே மூங்கில்களால் கம்பங்கள் நாட்டி அவற்றின்மேல் உயரத்தில் வீடுகளைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அத்தேசம் மிகவும் உஷ்ணபூமியாய் எப்போதும ஆவி கிளம்பிக்கொண்டே இருககின்றதானகையால, சீதபூமியில் வசிக்கும் ஐரோப்பியர் முதலியவர்க்கு வாஸயோக்கியமான விடமன்று. அந்நாட்டின் உட்புறமெல்லாம் தேக்குமரங்களும் பின்னும் பல உறுதியான காட்டுமரங்களும் நிறைந்த காடுகள் அடர்ந்திருககின்றன. தெற்கே பாக்குமரங்களும் மூங்கிற்புதர்களும் விசேஷம். நெல், கரும்பு, காப்பி, சவ்வு, பிசின்கள், மருந்துகளுக்கு உபயோகமான பல ஔஷதிகள் இவைகளெல்லாம பயிர்செய்து அங்கிருந்து வெளித்தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பர்மாதேசத்தின் ஒருபிரிவான பிரிட்டிஷ்பர்மாவானது பங்காளக்குடாக்கடலின் கீழண்டைக் கரையோரமாய் 900 மைலுக்கு அதிகதூரம் வியாபித்திருக்கின்றது. அத்தேசமானது 1826-ஹுத்திலும், 1852-ஹுத்திலும் அங்கிலேயர்க்கு அளிக்கப்பட்டது. ரங்கூன், பெகு, மோல்மீன், ஆரகன், சித்தகாங இவை அத்தேசத்துப் பிரதான நகரங்களாம். மலாக்காவுக்குத் தெற்கிலுள்ள, ஜலசந்தி மாகாணங்களென்று சொல்லப்பட்ட, பினாங், சிங்கபூர் என்னும இரண்டு சிறு மாகாணங்களும் அங்கிலேயருடைய காணியாட்சிக

ளாம். பிரஞ்சுக்காரருக்கும் மீகாங் நதிச்சாரலில் ஸேபிகன் என்று ஒரு நாடு இருக்கின்றது.

பர்மாராஜ்யத்தில் ஒரு ராஜன் சுதந்தரராஜாவாய் அரசாண்டு வருகிறான். ஐராவதி நதியின் மேற்பாகத்திலுள்ள மாண்டலே என்பது அதற்கு ராஜதானியாம். அதன் அரசனுக்கு தீபா என்று பெயர். அவன் மிகவும் கொடியனாகி, இவன் பித்தனோவென யாவரும் கருதத்தக்கவனாயிருக்கிறான். அத்தேசத்துக் குடிகளுக்கு அவன் பேரைக் கேட்டாலே சிம்மசொப்பனந்தானென்கிறார்கள். ஆயினும் அத்தேசத்தார் வரவர விருத்தியடைந்துகொண்டே இருக்கிறார்கள். பூமி மிகவும் செழிப்பானது; மிகச்சிறந்த பொருள்களெல்லாம் விசேஷமாக விளைகின்றன.

பர்மாதேசத்தாருடைய மதம் பவுத்தமதம். அங்கே ஆண்டிமடங்கள் அநேகம் உண்டு. அம்மடத்து ஆண்டிகள் நாள்தோறும் பிச்சையெடுத்து மடங்கள்தோறும் பள்ளிக்கூடம் வைத்துப் பரிபாலித்துவருகிறார்கள். அப்பள்ளிக்கூடங்களில் 8 வயதுமுதல் அநேகம் பிள்ளைகள் வந்து சேர்ந்து பர்மாதேசத்துப் பாஷையை நன்றாய் எழுதப்படிக்கக் கற்பதோடு, பாலியென்னும் மற்றொரு பாஷையையும் கற்றுவருகிறார்கள். வேறு பல சில்லறை விஷயங்களும் கற்கின்றார்கள். எல்லாவற்றிலும் அப்பாடசாலையை நடத்துகிற மாதிரியும் ஒழுங்குபாடும் மிகவும் திருத்தமானது. குடியானவனுடைய மகன் தொடங்கிக் கோடீசுவரனுடைய மகன்வரையில் எல்லாப் பிள்ளைகளும் அங்கே ஒரு தன்மையாகவே நடத்தப்படுகின்றனர். ஐரோப்பிய பாஷைகள் பரவிய இடங்களெல்லாம் பிள்ளைகள் சுறுசுறுப்பும் சாமர்த்தியமும் விவேக விருத்தியும் உள்ளவர்களாகி அனைவரும் கொண்டாடத்தக்கவராய் இருக்கின்றனர்.

சீயம்ராஜ்யமானது பர்மாராஜ்யத்திலும் அதிகமான நாகரிகம் பெற்ற ராஜ்யமாம். இதற்கு முன்னிருந்த இரண்டு ராஜாக்களும் இங்கிலீஷ்பாஷை கற்று அந்தேசத்துப் பல புத்தகங்கள் படித்தவர்கள். சிலநாளைக்குமுன் இருந்த ராஜன் சோதிடசாஸ்திரத்திலும் மிகத் தேர்ச்சிபெற்றவன். சீயம்ராஜ்யத்துக்கு ராஜதானி பாங்காக்கு நகரமாம்.

காம்போதியாவைப்பற்றி இன்னும் விசேஷமாய் ஒன்றும் தெரியாது. அதன் ராஜதானி ஊதாங் நகரமாம். அத்தேசம் மிகவும் உஷ்ணபூமியாய் அசவுக்கியத்திற்கு இடமாயும் காடுகள் அடர்ந்தும் இருக்கின்றது. அத்தேசத்து மத்தியிலே வெகு அழகான சித்திரவேலைகள் அமைந்த ராஜமாளிகைகளும் நகரங்களும் அநேகம் அழிந்து, அவற்றின் அடையாளங்கள் வெகுவாய்க் காணப்படுகின்றன, அவற்றைப் பார்க்கும்போது முற்காலத்தில் அத்தேசம் வெகு பெருமைபெற்றிருந்ததெனக் குறிப்பாய்த் தெரியவருகின்றது. மஞ்சள் வர்ணத்துக்கு உபயோகமான ஒருவகைப் பிசினும், ஒருவித

V. Subrahmanya Aiyar, B
Bellary.

THE ARCTIC OCEAN.—வடசமுத்திரம்.